**Lanka Microfinance Practitioners' Association**



# வளர்ச்சிக்கும் சம நிலைக்குமான நுண்நிதி

# முகவுரை

கடந்த மூன்று தசாப்தங்களாக நுண்நிதித் துறை பல விதமான மாற்றங்களைக் கொண்டுள்ளது. 1970 காலப்பகுதியில் ஒரு ஆராய்ச்சி செயற்றிட்டமாக தொடங்கிய இந்த துறை இப்பொழுது ஒரு ஆரவாரமானதொரு துறையாக மாற்றமடைந்துள்ளது. அநேகமான நிதி நிறுவனங்கள் தங்களுடைய எல்லையினை நுண் நிதித் துறைக்கு விரிவுபடுத்தியுள்ளனர். இருந்தாலும், நுண்நிதி என்கின்ற கோட்பாடு, அநேகமான மக்களின் எண்ணக்கருவில், வறிய மக்களுக்கு நிதிசார்ந்த கடன் வழங்குவதாகவே இன்னமும் நிலைகொண்டுள்ளது.

நுண் நிதித் துறை சார்ந்த வினாக்களுக்கு விடையளிப்பதோடு இத்துறையில் பொதுவான இலங்கையர்களின் பங்கினையும் வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதே இந்த கையேட்டின் நோக்கமாகும். இது, தற்போதைய நிறுவனம் சார்ந்த கட்டமைப்பு, தேசிய வலையமைப்பு அதேபோன்று நுண்நிதி முனைவோர்களின் செயல் திறனையும் சுட்டிக்காட்டுவதாக அமையும்.

அண்மைக்காலமாக கலந்துரையாடலுக்கு கொண்டு வரப்பட்ட மிகவும் முக்கியமான விடயமான இலங்கையிலுள்ள நுண்நிதித் துறைக்கான ஒழுங்கு முறை அமைப்பு சம்பந்தமாக வாசகர்களின் கவனத்தைக் கவருவதும் இந்தப் பிரசுரத்தின் மற்றுமொரு முக்கியமான விடயமாகும். இந்தத் துறை சார்ந்த முக்கியமான பங்குதாரர்களுக்கிடையில் ஒரு சிறந்த ஒழுங்குமுறை அமைப்பினை நடைமுறைப்படுத்தவது சம்பந்தமாக பல கலந்துரையாடல்கள் நடைபெற்றதாயினும் இது சம்பந்தமான முறையானதொரு நடவடிக்கை எடுப்பது இன்னமும் நிறைவேறாமலேயுள்ளது. இலங்கையில் உள்ள நுண்நிதி முனைவோர்களை பிரதிநிதிப்படுத்தும் அமைப்பான, லங்கா நுண்நிதி தொழில்முனைவோர் சங்கம் (LMFPA) இந்த முக்கியமான விடயத்தின் தேவைக்கு அழுத்தம் கொடுத்து நிவர்த்தி செய்ய முயற்சிக்கின்றது மற்றும் நுண்நிதித் துறைக்கான ஒரு ஒழுங்குமுறை அமைப்பினை நடைமுறைப்படுத்த பரப்புரை செய்யும் பங்குதாரர்களுக்கும் இந்தக் கையேடு மேலும் தெளிவுபடுத்தும். மகிந்த சிந்தனை விஞ்ஞாபனத்திற்கு அமைவாக இந்´ல் அமைவதோடு ஸ்ரீலங்காவில் நுண்நிதித்துறை வளர்ச்சி சம்பந்தமாக நிதி அமைச்சர் அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் ஈடுபாட்டினையும் லங்கா நுண்நிதி தொழில்முனைவோர் சங்கம் மிகவும் கரிசனையுடன் ஏற்று பாராட்டுகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில், இந்தக் கையேட்டினை வடிவமைக்க முக்கிய முதுகெலும்பாக விளங்கிய லங்கா நுண்நிதி முனைவோர் சங்கத்தின் பொருளாளர் திரு. M.M. அத்தனாயக்கா அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன். இதனுடைய முந்தைய வரைவுக்காக தன்னுடைய மதிப்புமிக்க கருத்துக்களை போதியளவில் வழங்கிய கலாநிதி.நிமல் பெர்ணாண்டோ அவர்களுக்கும் மற்றும் இந்தக் கையேட்டினை திருத்தி அமைக்க உதவி செய்த கலாநிதி. பு. உஸ்வெட்டாராச்சி அவர்களுக்கும் நன்றியினைக் கூறிக் கொள்கின்றேன். சபையினருக்கு இந்தக் கையேட்டின் வரைவினை ஏற்று பிரசுரித்ததற்கும் லங்கா நுண்நிதி தொழில்முனைவோர் சங்கத்தின் பணிப்பாளர் சபையினருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தக் கையேடு பதிப்பினையடைய அதற்குரிய நிதியினைத் தந்துதவிய பிளான் ஸ்ரீலங்கா நிறுவனத்திற்கும் என்னுடைய விசேடமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சன்ன ஜெயதிலக்க
தலைவர் 2011/12
லங்கா நுண்நிதி தொழில்முனைவோர் சங்கம்

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| அறிமுகம் | 01 |
| வறுமை ஒழிப்பில் நுண்நிதியின் பங்கு | 02 |
| இலங்கையில் நுண்நிதியின் அனுபவங்கள் | 06 |
| துறையின் தற்போதைய நிறுவன கட்டமைப்பு | 08 |
| லங்கா நுண்நிதி தொழில்முனைவோர் சங்கம் (LMFPA) | 10 |
| இலங்கையில் நு.நி.நிறுவனங்களின் செயல்திறன் | 11 |
| இலங்கையில் நுண்நிதித் துறைக்கான கட்டுப்பாடுகள் | 16 |
| இலங்கையில் நுண்திதித் துறைக்கான பிரச்சனைகள் | 17 |
| ஒரு உகந்த கட்டுப்பாட்டு அமைப்பின் முக்கியத்தவம் | 20 |
| முடிவுரை | 21 |

# அறிமுகம்

சமூகத்திலே உள்ள வறிய மற்றும் பொருளாதார, சமூக ரீதியில் நலிவடைந்துள்ள பகுதியைச் சார்ந்தோரின், குறிப்பாக பெண்களின் வறுமை நிலையினைக் குறைப்பதற்கும் மற்றும் அவர்களை வலுவூட்டுவதற்கும் பாவிக்கப்படும் ஒரு திறமையான வளர்ச்சிக் கருவியாக நுண்நிதி உலகளாவிய ரீதியில் அங்கிகரிக்கப்பட்டுள்ளது. வங்காளதேசத்தில் ஒரு சிறிய குக்கிராமத்தில் 1970 நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு சிறியளவிலான செயல் ஆராய்ச்சி, சிறிய மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட குடும்பங்களையும் அவர்களுடைய சிறு தொழில்முயற்சிகளையும் இலக்காகக் கொண்டு ஆரம்பித்த இந்த செயற்பாடு நிதிச் சேவைத் துறையாக மாற்றமடைந்து அங்கீகாரம் பெற்றுள்ளது. கொள்கை வகுப்பாளர்களும் மற்றும் மத்திய வங்கியாளர்களும் நிதிச் சந்தையில் இந்த புதிய தோற்றப்பாட்டிற்கு அதிகளவிலான கவனத்தினைச் செலுத்தி, நுண்நிதி நிறுவனங்களுக்கு(நு.நி.நி) ஒத்தாசை புரிந்து இந்தத் துறையில் ஒரு முக்கியமான பங்கினை வகிக்கும் வகையில் மாற்றியுள்ளனர். இருந்தாலும், இத்துறையில் சீர் செய்ய வேண்டிய இன்னும் பல பிரச்சனைகள் உள்ளன. இந்தப் பிரச்சனை நாட்டுக்கு நாடு மாறுபடக்கூடியதாக இருந்தாலும் சில பொதுவானவையாக காணப்படுகின்றன. இந்தத் துறைக்கு நு.நி.நி அடங்கலாக ஒரு ஆரோக்கியமான வளர்ச்சிக்கு ஆதரவு வழங்கி வழி காட்டும் வகையில் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை செய்யும் வகையில் ஒரு அமைப்பினை நிறுவுதல் பொதுவான பிரச்சனையாக இருக்கின்றது. இக்கட்டுப்பாட்டு அமைப்பானது நுண்நிதி சந்தையின் குறிப்பிடப்பட்டுள்ள பண்புகளுக்கும் மற்றும் பலவகைப்பட்ட நு.நி.நி ஏற்புடைய வகையிலும் தேவையாக இருப்பதால், இது ஒரு சவாலான பணியாகும்.

வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பொருளாதார மற்றும் சமூக வலுவூட்டலை நோக்கமாகக் கொண்ட நிதிச் சேவையின் நிலைத்து நிற்கக்கூடிய வளர்ச்சியின் முக்கியத்தினை அங்கீகரிக்கும் வகையில்,ஒரு மேலும் சாதகமான சூழ்நிலையினை உருவாக்கும் நோக்கத்துடன் அநேகமான நாடுகள் ஒரு சட்ட ரீதியான கட்டமைப்பினை தோற்றுவிக்க முயற்சிகள் எடுத்துள்ளன. இந்தப் பணியின் வெற்றி, கொள்கை வகுப்பாளர்கள் துறையின் குணாதியத்தினை நன்கு புரிந்து கொள்ளும் அளவைப் பொறுத்தேயுள்ளது. ஏனென்றால் 1983ல் உருவாக்கப்பட்ட உலக முக்கியம் வாய்ந்த கிராமின் வங்கியின் ஸ்தாபகர் நோபல் பரிசு பெற்ற பேராசிரியர் மொகமட் யூனுஸ் அவர்கள் நுண்நிதி வித்தியாசமானதென தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளார்.

நுண் நிதித் துறையினையும் அது எதிர் கொள்ளும் பிரச்சனைகளை பற்றியும் சிறந்த அறிவ-னைப் கொள்கை வகுப்பாளர்கள் அறிந்து கொள்ள உதவுவதே இந்தக் கையேட்டின் நோக்கமாகும். இவ்வாறான அறிவு நிலைத்து நிற்கக்கூடிய நிதிச் சேவையினை வறியவர்களுக்கு மிகவும் உகந்த வகையில் கொள்கைகளை வடிவமைப்பதிலும் மற்றும் நடைமுறைப்படுத்தவதிலும் கொள்கை வகுப்பாளர்களுக்கு உதவுவதுடன் அதன் மூலமாக வறுமைக் குறைப்பினை நாடும் அவர்களுக்கு திறமையானதும் தெளிவானதுமான முடிவுகளை அடைய ஒரு சந்தர்ப்பத்தினை வழங்குவதாகவும் அமையும் என நாங்கள் நம்புகின்றோம்.

இந்தக் கையேடு வறுமைக் குறைப்பில் நுண்நிதியின் பங்கினையும் ஸ்ரீலங்காவில் நுண்நிதித் துறையின் வரலாற்று ரீதியான வளர்ச்சியினையும்,தற்போதைய நிறுவன கட்டமைப்பினையும் மற்றும் துறை சார்ந்த சாதனைகளையும் சுருக்கமாக விவரிக்கின்றது. ஸ்ரீலங்காவில் நுண்நிதித் துறையின் வளர்ச்சியினை நோக்கியதான அரசாங்கத்தின் கொள்கையின் பகுதி, பிரச்சனைகள் சம்பந்தமான முக்கியமாக கட்டுப்பாட்டு அமைப்பினை அறிமுகப்படுத்தும் பிரச்சனைகளையும் மற்றும் சில முடிவுகளையும் கொண்ட கலந்துரையாடலைத் தொடர்ந்ததாகும்.

# வறுமை ஒழிப்பில் நுண்நிதியின் பங்கு

நுண்நிதி துறை என்பது, வங்கி மற்றும் ஏனைய பாரம்பரிய நிதி நிறுவனங்களில் சாதாரண நிதி சம்பந்தமான சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு வசதியற்ற வறிய மற்றும் குறைந்த வருமானங்களைக் கொண்ட சேவை பெறுனர்களை இலக்காக கொண்டு செயற்படுத்தப்படும் பல்வேறான நிதி சேவைகளைக் குறிக்கும். இந்த சேவை பெறுநர்களால் நிறுவனங்களால் விதிக்கப்படும் கடுமையான பிணைகள் மற்றும் ஏனைய நிபந்தனைகளை சந்திக்க முடியாமல் இருக்கின்றது. பாரம்பரிய நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் பாரிய நிதிச் சேவைகளோடு ஒப்பிடும் போது, சிறு அளவிலான கடன்கள், சேமிப்புகள், கொடுப்பனவு வசதிகள், காப்புறுதி முதலியன நுண்நிதித் துறையின் குறிப்பிடதக்க அம்சமாகும்.

உலகிலுள்ள கோடிக்கணக்கான வறிய மற்றும் குறைந்தளவு வருமானம் பெறும் மக்களின் வாழ்வாதாரங்களை மற்றும் குடும்ப நலன்களை மேம்படுத்தி அதே நேரத்தில் நிதி சம்பந்தமான பாதிப்பினையும் குறைக்க நுண்நிதி சந்தர்ப்பங்களை வழங்குகின்றது. வறிய மக்கள் நியாயமான விலையில் நிதிச் சேவைகளைப் பெறுவதன் மூலம் பொருளாதார வாய்ப்புக்களை பயன்படுத்தி கொள்ளல், சொத்துக்களை உருவாக்குதல் மற்றும் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தினைப் பாதிக்கும் புற அதிர்ச்சிகளைக் குறைத்தல் போன்றவற்றிற்கு உதவுகின்றது. வறிய மக்களிடம் அதிக பணம் இல்லாததால் ஏனைய குடும்பங்களை விட அதிகமாக நிதிச் சேவையினைப் பெற வேண்டிய தேவை அவர்களுக்குள்ளது.

நுண்நிதி நிறுவனங்கள், வறிய வாடிக்ககையாளர் குழமங்களுக்கு பொருந்தும் வகையில் அவர்கள் சம்பாதிக்க, சேமிக்க, மற்றும் அவர்களது சொந்த தேவைகளுக்கு பொருந்தும் வகையில் புதுமையான நிதிச் சேவைகளை வழங்கும். குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு கிடைக்கும் நுண்நிதிக்கடன்கள், உதாரணமாக, உற்பத்தி மூலதனத்தினைப் பெறுவதற்குரிய கட்டுப்பாட்டினை நீக்குகின்றது. மூலதனம் கிடைப்பது குறைந்த வருமானம் பெறும்அவர்களுடைய கொடிய வறுமைச் சுழற்சியிலிருந்து வெளியே வர உதவுகிறது மற்றும் குறைந்த முதலீடு மூலமாக வருமானம் மற்றும் முதலீட்டு சுழற்சியினைத் தோற்றுவிக்கின்றது.

நாடுகளுக்கிடையிலான நுண்நிதி அனுபவங்கள் வறியவர்களுக்கு நிதி வழங்கலில் இருந்த சில தவறான கருத்துக்களை நீக்கியுள்ளன. வறியவர்கள் முதலீட்டுக்கு தகுந்தவர்களல்ல என்பதே பாரம்பரிய நம்பிக்கையாக இருந்து வந்தது. இந்த நம்பிக்கை பாரம்பரிய நிதி நிறுவனங்கள் வறியவர்களை உதாசீனப்படுத்தும் நிலைக்கு இட்டுச்சென்றது. வறியவர்கள் மூலதனத்தினைத் பயனுள்ள வகையில் நடாத்த திறமையற்றவர்கள், எனவே அவர்களுக்கு சந்தை வீதத்திற்கமைவாக வட்டி வீதத்தினை அறவிடாது குறைந்த வீதத்தில் மானிய அடிப்படையில் வட்டியினை வழங்கி அவர்களுக்கு உதவ வேண்டும் என்கின்ற எண்ணக் கருத்தும் இருந்து வருகின்றது. ஆனால் பல நாடுகளிலிருந்து பெறப்பட்ட அனுபவங்கள், வறியவர்கள் வங்கிச் சேவைக்கு பொருத்தமானவர்கள், நம்பகரமான வாடிக்கையாளர்கள் மற்றும் அவர்களுடைய கடன்களை சீராகப் பயன்படுத்தி தங்களுடைய வியாபாரத்தினை நடாத்த திறன் உள்ளவர்கள் என்கின்ற உண்மையை வெளிப்படுத்தியுள்ளது. அவர்கள் தங்களுடைய கடன் தவணைப் பணத்தினை ஒழுங்காக மீளளிக்கின்றனர், தரவுகளின்படி, பொதுவாக பணக்கார மக்களைவிட வறிய மக்கள் மீளளிப்பு விடயத்தில் சிறந்தவர்களாக இருக்கின்றனர்.

நுண்நிதி வாடிக்கையாளர்கள் சிறியளவில் கடன்கள், சேமிப்புக்களை பெறுகின்றனர் மற்றும் நுண்நிதி நிறுவனங்கள் இவர்களுக்கு திறன்மிக்க செயல்முறைகளைக் கொண்ட பொருத்தமாக நிதிச் சேவைகளையும் வழங்குகின்றன. நுண்நிதிச் சேவைகள் வறிய மக்களின் பொருளாதாரத்தினை மட்டுமல்லாது, அவர்களுடைய குடும்பங்களின் சமூக நிலை, ஊட்டச்சத்து, கல்வி, தொழில், வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மையினையும் மேம்படுத்துகின்றன. நுண்நிதி துறை சமூகத்தின் பலவீனமான பகுதியினர் மற்றும் திறன் மிக்க பெண்கள் அடையாளங்களாகவும் உதவுகின்றது.

நுண்நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் ஆதிக்கம் செலுத்தும் இரண்டு நிதிச் சேவைகள் நுண்கடன் மற்றும் நுண்சேமிப்புமாகும். சேமிப்பவருக்கு குறைந்த பட்ச பரிமாற்றச் செலவினைக் கொண்டதாக சேமிப்பு சேகரிக்கப்படவேண்டும். அத்தோடு பணம் பாதுகாப்பாக இருக்கவேண்டியதோடு மீளளிப்பும் இலகுவாக இருக்கவேண்டும். நுண் சேமிப்பு என்பது மறுபுறத்தில் வறிய மக்கள் அவர்களுக்கு சேமிக்கக் கூடியளவில், சிறியளவிலாவது சேமித்து ஒழுங்கற்ற வருமானம் மற்றும் அவசர நிலையினையும் சமாளிக்கும் வகையில் இயலாமை என்கின்ற காலத்திற்கு போவதை தவிர்க்கின்றது. நு.நி.நி, குறிப்பாக அரச சாரபற்ற நு.நி.நி, பொதுவாக சேமிப்பு பழக்கத்தினை வறிய மக்களுக்கு ஊக்குவித்து சிறியளவில் சேமிக்க பழக்கி அவ்வாறான சேமிப்பினை அவர்களுடைய கடன்களுக்கு பொறுப்பாகவும் இருக்கின்றது. நு.நிநி வறிய மக்களின் சேமிப்புக்கு தகுந்த வகையில் குறிப்பிட்ட சேமிப்பு சேவைகளை வழங்குகின்றன. கடன்கள் நம்பிக்கையில் மட்டும் வழங்கப்படகின்றன. மீளளிப்புகள் அவர்களுடைய ஒழுங்கற்ற வருமான முறைகளுக்கு ஏற்ற வகையில் இருக்கும். ஒரு முக்கியமான அம்சம் என்னவெனில், வறிய மக்களுக்கு தொடர்ச்சியான கடன் வழங்கல் மூலமாக அவர்கள் தொடர்ச்சியாக நிதியுடன் சம்பந்தப்பட்டவர்களாகின்றனர்.

நுண்நிதி புத்தாயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு, குறிப்பாக கீழ்க்கண்டவாறு உதவுகின்றது

- நாளாந்தம் $ 1 குறைவான வருமானத்தில் வாழும் மக்களின் தொகையை அரைவாசியாக குறைத்தல்.
- பெண்கள், ஆண்கள் மற்றும் இளைஞர்களுக்கு கௌரவமான வேலை வழங்கல்
- வறுமையில் வாடும் மக்களின் தொகையை அரைவாசியாக குறைத்தல்.

இது நுண்நிதியின் பெறுமானத்தினை ஒரு வளர்ச்சிக் கருவியாக மேம்படுத்துகின்றது. நு.நி.நி அதிகளவு வறிய மக்களது வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில் முயற்சி செய்கின்றது. வறுமையின் கீழ் வாழும் பெண்கள், குடும்பப் பொறுப்புக்கள் மற்றும் குழந்தைகளைப் பராமரிப்பு காரணமாக வீட்டிலேயே இருப்பதாலும் மற்றும் சிறிய வியாபார முயற்சிகளை நல்ல முறையில் நிதிப் பொறுப்புடன் நடாத்தும் திறமையும் கொண்டுள்ளதாலும் அவர்கள் நுண்நிதி நடவடிக்கைகளில் ஒரு இலக்கான குழுவாக இருக்கின்றனர். நுண்நிதி, பெண்கள் தங்களுடைய குடும்பத்தில் முடிவுகளை எடுக்கும் பொறுப்பினையும் மற்றும் தன்நம்பிக்கையினையும் அதிகப்படுத்தியுள்ளது. செல்வத்தினை உருவாக்குதல் மூலம் வளர்ச்சி மற்றும் வறுமையினைக் குறைத்தல் ஆகிய நோக்கங்களை நுண்நிதி அடைகின்றது. சிறிய தொழில் முயற்சிகள் மூலமாக வேலை வாய்ப்புக்களையும் நுண்நிதி தோற்றுவிக்கின்றது. இதற்கு மேலாக, நுண்நிதி, இளைஞர்களுக்கு குறிப்பாக பெரும்பான்மையான பெண்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கும் ஒரு முக்கியமான ஆதாரமாக இருக்கின்றது என்பதனை அநேகமாக மக்கள் அறியாமல் இருக்கின்றனர்.

**நுண்நிதி நிறுவனங்கள் வங்கிகள் மற்றும் ஏனைய பாரம்பரிய நிதி வழங்கும் நிறுவனங்களை விட வேறுபட்டவை**

சமூகப் பணியினையும் மற்றும் நிதிச் சேவைகளை வழங்கும் முறைகளைப் பொறுத்து நுண்நிதி நிறுவனங்கள் வங்கிகள் மற்றும் ஏனைய பாரம்பரிய நிதி வழங்கும் நிறுவனங்களிடமிருந்தும் கணிசமான அளவு வேறுபடுகின்றன. நுண்நிதி வளர்ச்சிக்கு ஒரு சிறந்த கொள்கையினை வடிவமைப்பதற்கு, இவ்வறான நுண்நிதித் துறை சம்பந்தமான அடிப்படையான வேறுபாடுகளையும் மற்றும் விசித்திரமான குணாதியங்களையும் அறிந்து கொள்வது தேவையாகின்றது.

## ■ நம்பிக்கையின் அடிப்படையிலான கடன்

வழங்கும் கடன்களின் சகல செயற்பாடுகளும் பிணைகளைப் பொறுப்பாக எடுக்காமால் நம்பிக்ககையின் அடிப்படையில் செயற்படுவது நு.நி.நி வழங்கும் கடன்களுக்கும் வங்கிகள் வழங்கும் கடன்களுக்குமிடையில் உள்ள அடிப்படை வேறுபாடாகும். ஈடு வைப்பதற்கு ஏதுவாக இவ் வாடிக்கையாளர்களிடம் சொத்துக்கள் இருப்பதில்லை. வாடிக்கையாளரிடம் கொண்டுள்ள நம்பிக்கைதான் நு.நி.நி கடன்களின் முக்கியமான சொத்தாகும். நுண்நிதியில் வறியவர்கள் மிகவும் நம்பிக்கையானவர்களும் பொறுப்பானவர்களும் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நுண்நிதியின் அணுகுமுறைகள் வாடிக்கையாளர்களுக்கும் நு.நி.நி இடையிலான நம்பிக்கையினை வளர்ப்பதற்கான அதிக முக்கியத்துவத்தினை ஏற்படுத்துகின்றன.

## ■ புதுமையான முறைகளும் மற்றும் பொருட்களும் (சேவைகள்)

சாதாரணமான வங்கி செயற்பாடுகளில் இருப்பது போலல்லாது, நு.நி.நி ஆகக் கூடியளவு வறிய மக்களை அடையும் வகையில் முறைகளை புதுமையான வகையில் தோற்றுவிக்க தள்ளப்படுகின்றனர். இவ்வாறு செய்யும் பொழுது, முறையான முறைகளை தோற்றுவிக்கும் வேளையில் பலவிதமான குறிப்பிட்ட சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும். இவ்வாறான சவால்கள் பின்வருமாறு:

- o கடன் பெறுபவர்கள் சம்பந்தமான பூர்த்தியற்ற தகவல்கள், அதன் காரணமாக கடன்படும் எந்த நபர் ஒழுங்காக கடன்களை மீளச் செலுத்துவார் என்கின்ற பிரச்சனை கடன் வழங்குபவர்களுக்கு தெரியால் இருக்கும்
- o ஒப்பந்தங்களை அமுல் படுத்துவதில் கஷ்டங்கள்
- o நிதிச் சேவைகளை வழங்குவதில் அதிக பரிமாற்றச் செலவுகள்

இதே வேளையில், வாடிக்கையாளர்களின் கேள்விகளை திருப்தி செய்யும் வகையில் பொருத்தமான முறை மற்றும் சேவைகள் அமைந்திருக்க வேண்டும் சேமிப்பவர்கள் தங்களுடைய சேமிப்புகள் பாதுகாப்பாக இருப்பதோடு, மிகக் குறைந்த வைப்புகள், இலகுவான மற்றும் விரைவான மீளளிப்பு, அருகாமையில் பெறக்கூடிய வகையான வசதிகள் என்பவற்றினை எதிர்பார்ப்பார்கள்.

கடன் பெறுபவர்கள், அடிக்கடி மற்றும் விரைவாக சிறியளவில் நியாயமான விலையில் பெறப்படும் கடன்கள், கடன்களுக்கு எதுவதமான பிணைத் தேவையின்மை நியாயமான கட்டணம்,பெண்களினதும் மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்தோரினதும் தேவைகளுக்கு ஏற்ற வகையிலான விதிகள், தங்களால் நம்பத்தகுந்தவர்களால் நடாத்தப்படும் நிதி நிறுவனங்களை எதிர்பார்ப்பதோடு, அந்நிறுவனங்கள் தங்கள் மேல் நம்பிக்கை வைத்திருப்பதையும் எதிர்பார்க்கின்றனர். இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதோடு, நுண்நிதிச் சேவையினை வழங்கும் நிறுவனங்கள் தங்களுடைய நிலைத்து நிற்கும் தன்மையினையும் கருத்தில் கொண்டு பலவிதமான முறைமைகளையும் பொருட்களையும் உருவாக்குவார்கள்.

நு.நி.நி பரிமாற்றச் செலவினை குறைந்தளவில் வைத்துக் கொள்ள முயற்சிகள் எடுப்பார்கள். இதற்காக கடன்கள் மீதான வட்டி வீதம் குறைவாக இருக்கவேண்டும். அதே போன்று கட்டணங்களும் குறைவாக இருக்க வேண்டும். கடன்களை பரிசீலிப்பது விரைவாக இருக்க வேண்டும். நு.நி.நி வாடிக்கையாளர்களுக்கு அண்மையில் இருக்க வேண்டும். குழுக்களின் கூட்டத்தில் செலவழிக்கப்படும் நேரம் குறைவாக இருக்க வேண்டும். இந்த செயற்பாடுகளால் வியாபாரத்திலிருந்து வெளியே செலவிடப்படும் நேரத்தினைக் குறைக்க முடியும். வைப்பாளர்கள் குறைந்தளவு நிலுவையினையும், குறைந்தளவு பத்திர வேலைகளையும் மற்றும் மீளளிப்பில் குறைந்தளவு கட்டுப்பாடுகளையும் எதிர்பார்ப்பார்கள்.

## ■ நிதிச் சேவை தொடர்பற்ற சேவை வழங்கல்கள்

நிதிச் சேவையினைப் பெறுவதற்கு மேலாக, வறிய மக்களை உண்மையாக வலுப்படுத்த அவர்களுக்கு மேலதிக உதவிகள் தேவை என்பதினை நு.நி.நி தங்களுடைய அனுபவரீதியாக அடையாளம் கண்டுள்ளனர். அநேகமான நு.நி.நி கடனுடன் இணைந்த மேலதிக சேவை வழங்கல்களை மேற்கொள்கின்றனர். நுண்நிதி திட்டங்கள் இதர சேவைத்திட்டங்களான முதியோர் எழுத்தறிவு மற்றும் சிறுவர் கல்வி, எச். ஐ. வி, மற்றும் மலேரியா அடங்கலான சுகாதாரக் கல்வி, போஷாக்கு, நிதியறிவு, மொழிப் பயிற்சி, சட்ட ஆலோசனை, வியாபார பயிற்சிகள், திறன் பயிற்சி மற்றும் தலைமைத்துவப் பயிற்சி ஆகியவற்றுடன் இணைந்து செயற்படுத்தப்படுகின்றன.

## ■ வலையமைப்பினை வலியுறுத்தல்

நுண்நிதி முறைமைகள், குறைந்தளவிலான தகவல்கள் மற்றும் கடன்களுக்கு பொறுப்பாக சொத்துக்களை எடுக்காமலிருத்தல் ஆகியவற்றை ஈடு செய்யும் வகையில் செயற்பாடுகளின் பல நிலைகளில் வலையமைப்பினை உருவாக்குவதை வலியுறுத்துகின்றன. அதிகீழ் மட்டத்தில், சில குழுக்கள், பரஸ்பர உதவியுடன் அழுத்தம் கொடுக்கும் வகையில் சிறிய குழுக்களில் நிதிச் சேவைகளைத் திறம்பட நடாத்த மற்றும் நிதி ஒழுக்கத்தினைப் வாடிக்கையாளர்களுக்குள் பேணவும் தங்கியுள்ளன. இச்சிறிய குழுக்கள் கிராம மட்டத்தில் காலூன்றிய குழுக்களாக மாற்றப்பட்டு, பின்பு வலையமைப்புள்ள பெரிய குழுக்களாகின்றன. மேலும், ஒழுங்கான கூட்டங்கள் மூலம் இவ்வலையமைப்பு நிலைத்திருப்பது, சமூக மூலதனத்தினைக் கட்டியெழுப்புவதோடு வறிய மக்களின் பொருளாதார சுபீட்சம் மற்றும் வளர்ச்சியினை கட்டியெழுப்ப உதவும்.

## ■ சமூக குறிக்கோள்

முழுமையாக நிதி நோக்கத்திற்கு மேலாக சமூக குறிக்கோளை அடையும் நுண்நிதியின் ஒரு உள்ளார்ந்த பணி, பொதுவான வியாபார தத்துவத்திற்கும் நுண்நிதி வியாபாரத்திற்குமிடையிலான முக்கியமான வித்தியாசமாகும். நு.நி.நி சமூகக் குறிக்கோள்களை அடைவதிலுள்ள வெற்றிகரம் பல வகையான செயற்திறன் குறியீடுகள் மூலம் கண்காணிக்கப்படுகின்றன. இவ்வாறான குறியீடுகள், கீழ்வருவனவற்றின் சாதனைகளைப் பிரதிபலிக்கின்றன:

- அதிகமான வறிய மற்றும் அதிகமாக விலக்கப்பட்ட மக்களுக்கு நீடித்த வகையில் சேவைகள் வழங்குதல்,
- இலக்கிடப்பட்ட வாடிக்ககையாளர்களின் குறிப்பிட்ட தேவைகளுக்காக முறையான மதிப்பீடு மூலமாக வாடிக்கையாளர்களின் கிடைக்கக்கூடிய நிதிச் சேவைகளின் தரத்தினை, மற்றும் பொருத்தத்தினையும் மேம்படுத்துதல்,
- வாடிக்கையாளர்களுக்கு,அவர்களுடைய குடும்பத்தினருக்கு, மற்றும் சமூகத்திற்கு பயன்பெறும் பொருட்டு சமூக மூலதனம் மற்றும் சொத்து, வருமானம் மற்றும் நிதிச் சேவை வகைகளை உருவாக்குதல்,
- அதிர்ச்சி மற்றும் அவசர நிலைமையின் போது வாடிக்கையாளர்களின் பாதிப்பினைக் குறைத்தல்,
- வாடிக்கையாளர்கள், ஊழியர்கள் மற்றும் அது சேவை செய்யும் சமூகத்தின் மீதும் நு.நி.நி உரிய சமூக பொறுப்பினை மேம்படுத்தல்,

# இலங்கையில் நுண்நிதியின் அனுபவங்கள்

## வரலாற்று வளர்ச்சி

நுண்நிதிச் சேவைகளை வழங்குவதில் முதலாவது முயற்சி சிக்கன மற்றும் கடன் கூட்டுறவுச் சங்க நிறுவனங்கள் மூலம் 1906ல் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆரம்ப தசாப்தங்களில் இந்த இயக்கம் முக்கியமாக அரசாங்கத்தின் ஆதரவு காரணமாக தழைத்தோங்கியது, ஆனால் பின்பு கிராமிய நிதிச் சந்தையில் இது முக்கியமான தாக்கத்தினை ஏற்படுத்தத் தவறிவிட்டது. இந்த இயக்கம் 1980 களில் மீண்டும் உருவெடுத்து இப்பொழுது கிராமிய மட்டத்தில் நாடு முழுவதுமான பெரியளவிலான வலையமைப்பாக மாற்றமடைந்துள்ளது. 1947 தொடக்கம் 1990 காலப்பகுதியில் புதிய நிறுவனங்களை தோற்றுவித்து கிராமிய நிதியினை வழங்குவதிலும் மற்றும் மானிய அடிப்படையிலான வட்டி வீதத்துடன் அரச ஆதரவுடன் கூடிய கிராமிய கடன் திட்டங்களையும் அறிமுகப்படுத்தி பலவிதமான முயற்சிகளை அரசாங்கம் எடுத்தது.

அரசாங்கத்தின் முதலாவது கிராமிய நிதித் திட்டம், 1940 களின் பிற்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட விவசாயத் திட்டத்தினூடாக சிறிய கமக்காரர்களுக்கு மானியடிப்படையிலான நெல் பயிரிடுதலுக்காக கடன்களை, பல அரச திணைக்கழகங்கள் ஊடாக 1967 வரை வழங்கப்பட்டது. 1967ல் இந்த திட்டம் மத்திய வங்கியின் ஈடுபாட்டுடன் மாற்றம் செய்யப்பட்டது. மத்திய வங்கி திட்டத்திற்கான மீள்நிதி வசதியினையும் கடன் உத்தரவாதத்தினையும் வழங்கத் தொடங்கியது. இந்தத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு மக்கள் வங்கிக்கு அதனுடைய கிளைகள் ஊடாகவும் மற்றும் 1964 காலப்பகுதியில் தோற்றுவிக்கப்பட்டு மக்கள் வங்கியின் வழிகாட்டலில் இயங்கும் கிராமிய கூட்டுறவு வங்கிகளுக்கும் ஒப்படைக்கப்பட்டது. இந்த திட்டம் விரிவான கிராமிய கடன் திட்டமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டு மற்றும் 1973 அளவில் நெற் செய்கையை விட ஏனைய குறுகிய காலப் பயிர்ச் செய்கைகளையும் உள்ளடக்கியது. இலங்கை வங்கி, விவசாயிகளுக்கு கடன் வழங்கும் நோக்கத்திற்காக விசேடமாக உருவாக்கப்பட்ட அதனுடைய கிளை நிறுவனங்களான விவசாய சேவை நிலையங்கள் ஊடாக இந்த திட்டத்தினை நடைமுறைப் படுத்தும் செயலில் வந்தது. பின்பு, ஹட்டன் நாஷனல் வங்கி மற்றும் சில தனியார் வங்கிகளும் விவசாயக் கடன்களை நடைமுறைப்படுத்த தொடங்கின. இந்தத் திட்டம் இப்பொழுதும் மத்திய வங்கியின் நிதி மீளளிப்பு மற்றும் கடன் உத்தரவாதம் போன்றவை இல்லாமல் ஆனால் அரசிடமிருந்து வட்டி வீதத்தில் மானியம் பெற்று வங்கிகளினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

மத்திய வங்கி 1980 மற்றம் 1990 காலப்பகுதியில் கிராமிய கடன் வழங்கும் திட்டத்தினை விரிவு செய்து நடுத்தர மற்றும் நீண்ட கால கிராமிய கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தி அதன் மூலமாக விவசாயம் தவிர்ந்த செயற்பாடுகள், நீண்ட காலப் பயிர்ச் செய்கைகள், கால்நடை வளர்ப்பு மற்றும் சுய தொழில் நடவடிக்கைகளையும் ஊக்குவித்தது. இவ்வாறான கடன் திட்டங்களும்,மானிய அடிப்படையிலான வட்டி வீதங்கள் அடங்கியதாக அமைந்தன. இவ்வாறான கடன்களை அமுல் படுத்துவதற்கு ஏதுவாக நிதி மிளளிப்பு வசதிகள், கடன் உத்தரவாதம் ஆகியவையும் வழங்கப்பட்டன. இவ்வாறான பல திட்டங்களுக்கான நிதிகள் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி உள்ளடங்கிய சர்வதேச நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டன. விநியோக உந்துதல் இந்த கடன் திட்டத்தின் முக்கியமான அம்சமாகும், அதாவது கிராமிய வளர்ச்சிக்குத் தேவையான கடன்கள், இலக்கிடப்பட்ட செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் சலுகை அடிப்படையில் வழங்கப்படவேண்டும்.

1990 முற்பகுதியில் உலக வங்கியின் ஆதரவுடன் அறிமுகப்படுத்தப்பட்ட ஜனசவிய நம்பிக்கை நிதியம் கிராமிய நிதி அணுகுமுறையில் குறிப்பிடத்தக்க அளவு மாற்றத்தினைக் கொண்டு வந்தது. இந்த அணுகுமுறையின் கீழ், முதல் தடவையாக, ஜ.ந.நி வங்கி செயற்பாடற்ற நுண்நிதி நிறுவனங்களுடன் பங்குடமையினை அறிமுகப்படுத்தியது. அதிகளவிலான அ.சா.நி வணிக ரீதியான நுண்நிதி வியாபாரத்தினை மேற்கொண்டு மற்றும் அந்த நிறுவனங்களின் ஆற்றலை கட்டியமைக்கும் ஏனைய உதவிளை வழங்கும் ஜ.ந.நிதியத்துடன் இணைந்து கொண்டனர். இவ்வாறான சாதகமான சூழலில் தேசிய மட்டத்தில் வளர்ச்சியடைந்த வர்த்தக நு.நி. நிறுவனங்களில் சர்வோதய சீட்ஸ் ஒன்றாகும். பின்னர், ஜ.ந.நி தேசிய வளர்ச்சி நம்பிக்கை நிதியமாகமாறி மொத்த நுண்நிதித் துறையின் முக்கிய ஆதாரமாக விளங்கியது.

தற்பொழுது, இது ஸ்ரீலங்கா சேமிப்பு வங்கியின் கீழ் செயற்படுகின்றது. 1991ல் பரவலாக அறியப்பட்ட சிறிய விவசாயிகள் மற்றும் காணியற்றவர்களின் கடன் திட்டமான இசுறு திட்டம் அறிமுகம் மற்றுமொரு முக்கியமான மைல்கல் ஆகும். இசுறு திட்டம், மானிய அடிப்படையிலான கிராமிய கடன் திட்டத்திலிருந்து பிளவுபட்டு மற்றும் அடிமட்டத்தில் அ.சா.நி நடைமுறைப்படுத்தும் ஒரு வர்த்தக ரிதியான நுண்நிதி திட்டமாகும். இதன் மற்றுமொரு முக்கியமான அம்சம் என்னவெனில், இதன் மூலமாக நு.நி.நி மனித வளத்தினையும் மற்றும் ஏனைய தேவைகளயும் மேம்படுத்தி அவைகள் நிலைத்து நிற்கக்கூடிய வகையிலும் மற்றும் வர்த்தக ரீதியில் சாத்தியமான நிறுவனமாக வளர உதவி செய்கின்றது.

கிராமிய கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசாங்கமும் ஒரு நிறுவனம் சார்ந்த அமைப்பினை உருவாக்க முயற்சிகள் எடுத்தது. 1964ம் ஆண்டு கூட்டுறவு கிராமிய வங்கிகள் உருவாக்கப்பட்டு சேமிப்புகள், கடன்கள் மற்றும் நகைகள் ஈடுவைப்பது போன்ற முழு அளவிலான நிதிச்சேவைகளை வழங்கியது. 1985ல் பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகள் (பி.கி.அ.வ) தோற்றுவிக்கப்பட்டன மற்றும் இவைகள் தற்பொழுது ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரு தேசிய மட்ட வங்கியாக பிராந்திய அபிவிருத்தி வங்கி என அழைக்கப்படுகின்றது. சமுர்த்தி வங்கிகள் முற்று முழுவதும் வறிய மக்களுக்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்டன. பின்னர், துறைசார்ந்த வகையில் கிராமிய மட்ட கடன்களை வழங்குவதற்கு விவசாய வங்கிகள், கடற்றொழில் வங்கிகள் உருவாக்கப்பட்டன. கிராமிய கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்த உதவுவதற்கு மத்திய வங்கி பிராந்திய அலுவலங்களை திறந்தது. கிராமிய வங்கியியல் மற்றும் ஊழியர் பயிற்சி கல்லூரி கிராமிய கடன் பற்றி பயிற்சியளிப்பதற்காக தோற்றுவிக்கப்பட்டது. மத்திய வங்கி, கிராமிய கடன் சம்பந்தமான கொள்கைகள் மற்றும் திட்டங்களை மேம்படுத்தவும் மற்றும் கிராமிய கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்த ஒருங்கிணைக்கவும் தனியானதொரு பிரிவினை (கிராமிய கடன் பிரிவு) உருவாக்கியது.

1990 காலப்பகுதியிலிருந்து, சர்வதேச கொடையாளிகளிடமிருந்து நிதிகள் மானிய அடிப்படையில் அதிகளவில் வரத் தொடங்க, வர்த்தக ரீதி சார்ந்த அ.சா.நிறுவன நு.நி.நிறுவனங்கள் அதிகளவில் வளர்ச்சியடையத் தொடங்கின. இவ்வாறான நு.நி.நிறுவனங்கள், வறிய மக்களுக்கு சேவை செய்ய நுண்நிதியின் சர்வதேச சிறந்த நடைமுறைகளின் படிப்பினைகளைக் கவனத்தில் கொண்டன. இவ்வாறான நு.நி.நி வளர்ச்சிக்கு உதவிய உள்ளூர் கொடையாளிகளில் தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம், இசுறு திட்டம் மற்றும் சர்வதேச கொடையாளிகளின் உள்ளூர் அலுவலகங்களான ஸ்ரோம்மி பவுண்டேசன் (Stromme Foundation) மற்றும் எரிமோஸ் இத்தாலியும் (Etimos- Italy) அடங்கும். சகல வகையான நு.நி.நிறுவனங்களுக்கும் நிதி வழங்கும் வகையில் பல சர்வதேச கொடையாளிகளும், அ.சா.நி மற்றும் சனச அபிவிருத்தி வங்கி உட்பட நுண்நிதிச் சந்தையில் நுழைந்து கொண்டன. அண்மையில், பல நிதி மற்றும் குத்தகைக்கு விடும் நிறுவனங்களும் தங்களுடைய இலட்சியத்தினை விரிவாக்கும் திட்டத்துடன் நுண்நிதிச் சந்தையில் நுழைந்து கொண்டன.

# துறையின் தற்போதைய நிறுவன கட்டமைப்பு

### வித்தியாசமான சட்ட நிலையுடன் செயல்படும் பலதரப்பட்ட வகையான நு.நி.நி

இலங்கையில் நுண்நிதித்துறை, வித்தியாசமான நுண்நிதி முறைமைகளுடன் செயற்படுத்தும் பலவிதமான நிறுவனங்களினால் சேவையாற்றப்படுகின்றது. இவ்வாறான நிறுவனங்கள் வித்தியாசமான சட்டங்களினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. மேலும், இவ்வாறான நு.நி.நிறுவனங்கள் பல் வகைப்பட்ட வளர்ச்சி நிலையில் இருப்பதோடு இவை செயற்படும் பகுதிகள் சிறிய பிரதேசம் முதல் நாடு தழுவிய ரீதியில் பெரியளவிலான கிளைகளைக் கொண்ட வலையமைப்பாக வித்தியாசப்படுகின்றது.

### கிராமிய கூட்டுறவு வங்கிகள்

இவ்வாறான வங்கிகள் பிரதானமாக கிராமப் பகுதிகளில் சேமிப்பினையும் கடன் வசதிகளையும் நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றன. இவை சேமிப்பினை திரட்டுவதில் மிகவும் திறமையானவை. இவைகளின் கடன்தொகைகள் நகை ஈட்டினையே முக்கியமாகக் கொண்டிருக்கும். இந்த வங்கிகள் 6.5 மில்லியன் அளவான வாடிக்கையாளர்கள் தளத்தினைக் கொண்டதாக இருப்பினும் அவர்கள் எல்லோரும் செயற்படும் வாடிக்கையாளர்களல்ல. மத்திய வங்கியின் 2011 வருடாந்த அறிக்கையின்படி, 2019 கூ.கி.வங்கி கிளைகளில் 8.9 மில்லியன் வைப்பு கணக்குகளும் ரூபா.62,637 மில்லியன் பெறுமதியான வைப்புகளும் இருப்பதாக கூறப்பட்டுள்ளது. 1.89 மில்லியன் கடன் கணக்குகளும் ரூபா.38,278 மில்லியன் பெறுமதியான கடன் நிலுவைகளும் இருப்பதாக கூறப்பட்டுள்ளது. இதன்பிரகாரம், வைப்புகளுக்கும் கடன்களுக்குமான சராசரி பெறுமதி முறையே ரூபா.7,036 மற்றும் ரூபா.20,281 ஆகும்.

### சிக்கன மற்றும் கடன் கூட்டுறவு சங்கங்கள்

கிராமிய மட்டத்தில் சமூகம் சார்ந்த நிதி நிறுவனங்கள் செயல்படுகின்றன. அவைகள் பிராந்திய மற்றும் தேசிய மட்டத்திலுள்ள சம்மேளனங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. இவை கடன்களை அங்கத்தவர்களுக்கு மட்டும் வழங்கும். ஆனால் வைப்புகளை அங்கத்தவர்களாக இல்லாதவர்களிடமிருந்தும் பெறுவார்கள். 2010 வரையான காலப்பகுதி வரை 8440 சங்கங்கள் இருக்கின்றதாயினும், அவைகளில் செயற்படும் சங்கங்கள் மிகக் குறைவாகவேயுள்ளன.

மேலும், விவசாய கூட்டுறவுச் சங்கங்கள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற ஏனைய கூட்டுறவுச் சங்கங்களும் தங்களுடைய அங்கத்தவர்களுக்கு கடன் வழங்குகின்றன. இவ்வாறான கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்படும் நிதிச் சேவைகள் கூட்டுறவுச் சட்டத்திற்கு உட்பட்டன.

### சமுர்த்தி வங்கிகள்

நாடளாவிய ரீதியில் செயல்படும் சமுர்த்தி வங்கி சங்கங்கள் சமுர்த்தி வங்கி சட்டம் 1995ன் கீழ் செயல்படுகின்றன. அவை, ஜனசவிய திட்டத்தினை மாற்றி 1995ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சமுர்த்தி வளர்ச்சி திட்டத்தின் கீழ் நிதிச் சேவைகளை வழங்குகின்றன. சமுர்த்தி அதிகார வலைத்தளத்தின்படி, 2011ம் ஆண்டு இறுதிவரை 1042 வங்கிகளில் 2.5 மில்லியன் அங்கத்தவர்களுக்கு மேலாக இருக்கின்றனர். இவர்களுடைய மொத்த சேமிப்பு மற்றும் கடன்கள் முறையே ரூபா.41 பில்லியன் மற்றும் 11 பில்லியன் ஆகும்.

## உரிமை பெற்ற விசேட வங்கிகள்

இந்த வங்கிகளுக்கு நிதிச் சேவைகள் வழங்குவதற்கு மத்திய வங்கியினால் உரிமங்கள் வழங்கப்படுகின்றது. இவ்வாறு நுண்நிதிச் சேவைகளைில் ஈடுபட உரிமங்கள் வழங்கப்பட்ட வங்கிகளாக பிராந்திய அபிவிருத்தி வங்கி மற்றும் சனச அபிவிருத்தி வங்கி என்பனவற்றைக் குறிப்பிடலாம். தேசிய சேமிப்பு வங்கியும் நுண்நிதிச் சேமிப்பு வசதிகளை பொது மக்களுக்கு வழங்குகின்றது. தேசிய சேமிப்பு வங்கியின் மையங்களான தபாற் கந்தோர்களும் குறைந்த வருமானம் பெறும் மக்களை சிறியளவிலான சேமிப்புகளை உருவாக்க உதவுகின்றன. அரசாங்கம் 1985 தொடக்கம் விசேட சட்ட மூலம் பிராந்திய அபிவிருத்தி வங்கிகளை அறிமுகப்படுத்தியது. 17 பிராந்திய அபிவிருத்தி வங்கிகள் மாவட்ட ரீதியில் தோற்றுவிக்கப்பட்டன. 1998 ல் இவைகள் 6 வங்கிகளாக ஒன்றிணைக்கப்பட்டு, 2010ல் ஒரு தேசிய மட்ட வங்கியாக இணைக்கப்பட்டுள்ளது. சனச அபிவிருத்தி வங்கி அதிகளவிலான முக்கியமான சிக்கன கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சேவை வழங்குவதோடு வாடிக்கையாளர்களுக்கு பலவிதமான நிதிச் சேவைகளை நேரடியாகவும் மு.சி.கூ.சங்கங்கள் ஊடாகவும் வழங்குமளவில் வளர்ந்துள்ளது.

## வர்த்தக வங்கிகள், நிதி நிறுவனங்கள், மற்றும் குத்தகை நிறுவனங்கள்

சில நுண்நிதிச் சேவைகளை வழங்கும் வர்த்தக வங்கிகள், பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்கள் மற்றும் குத்தகை நிறுவனங்கள் இந்த வகையில் அடங்கும். இந்த நிறுவனங்கள் மத்திய வங்கியினால் வழங்கப்படும் உரிமங்களின் கீழ் செயற்படுகின்றன. அரசுடமையான வங்கிகளில் மக்கள் வங்கி, இலங்கை வங்கி என்பன நுண்நிதிச் சேவைகளை வழங்குவதில் முக்கியமானவையாகும். இவைகள் பிரதானமாக பயிர்செய்கைக் கடன் திட்டங்களையும் மற்றும் அரச ஆதரவு கொண்ட திட்டங்களையும் கிராமிய பகுதிகளிலுள்ள கிளைகள் மூலம் செயற்படுத்துகின்றன. தனியார் வர்த்தக வங்கிப் பகுதியில், ஹட்டன் நஷனல் வங்கி நுண்நிதிச் சேவையில் முக்கிய பொறுப்பினை வகிக்கின்றது. அண்மை காலமாக, வேறு சில வர்த்தக வங்கிகளும் நுண்நிதிச் சேவைகளில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. நிதி நிறுவனங்களுக்குள் நுண் நிதிச் சேவைகளின் வட்டிகளின் ஏற்றம் மிகவும் சமீபத்திய ஒரு வளர்ச்சியாகும். இருந்தாலும், தூரதிஷ்டவசமாக இவைகளுடைய செயற்பாடுகள் சம்பந்தமாக எதுவிதமானதொரு பத்திர ரீதியான தரவுகளும் தற்போது இல்லை.

## அ.சா.நி – நு.நி.நி

நுண்நிதி வியாபாரத்தில் ஈடுபடும் அ.சா.நிறுவனங்கள் மற்றும் சர்வதேச மற்றும் உள்ளூர் அ.சா.நிறுவனங்களினால் உருவாக்கப்பட்ட தனியான நுண்நிதி அமைப்புகளான நுண்நிதி நிறுவனங்களும் இதில் அடங்கும். மேலும் உத்தரவாதம் மூலம் வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள், பொது நிறுவனங்கள், மற்றும் தனியார் நிறுவனங்கள் போன்றவையும் இந்த வகையில் அடங்கும். 1980ன் பிற்பகுதியில், இவ்வாறான சில நுண்நிதி நிறுவனங்கள் தோன்றினதாயினும் அநேகமானவை சமூக மற்றும் சமுதாய மேம்பாட்டு பணிகளுடன் இணைந்த நுண்நிதியினைக் கொண்டவையாக காணப்பட்டன. 1990ன் பிற்பகுதியில், நுண்நிதி செயற்பாடுகள் சமுதாய மேம்பாட்டிலிருந்து விலகி மற்றும் நு.நி.நிறுவனங்கள் நுண்நிதியுடன் மட்டும் ஈடுபட்டு நிதி மற்றும் செயற்பாட்டு திறனுடன் கூடிய நுண்நிதியினை மேம்படுத்தின. மத்திய வங்கியின்படி 3750க்கு மேலான அ.சா.நி – நு.நி.நிறுவனத்தின் நிலையங்கள் காணப்படுகின்றன[1]. வறிய மக்களையும் மற்றும் பெண்களையும் தங்களுடைய வாடிக்கையாளர்களை முக்கிய இலக்காகக் கொண்டிருப்பதே இவ்வாறான நு.நி.நி ஒரு முக்கியமான குணாதிசயமாகும். முக்கியமான 49 நு.நி.நி செயற்படுகின்ற நிலையிலுள்ள கடன் பெற்றவர்களின் தொகை கிட்டத்தட்ட 1.4 மில்லியன் ஆகும். இவ்வாறான நு.நி.நி பலதரப்பட்ட சட்ட அடையாளங்களுடன் செயற்படுகின்றன[2]. சில வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களாகவும், வேறு சில உத்தரவாதத்துடன் இயங்கும் நிறுவனங்களாகவும் உள்ளன. மேலும், சில நு.நி.நிறுவனங்கள் சமூக சேவைகள் திணைக்களத்தின் சட்டங்களின் கீழும் இயங்குகின்றன.

பெரும்பாலும் அ.சா.நி மற்றும் வங்கியல்லா நு.நி.நிறுவனங்களும் ஒரே வகையானவை என்கின்ற கருத்து காணப்படுகின்றது, ஏனெனில், அவைகள் சமுதாய வளர்ச்சி சம்பந்தமான சில கூறுகளைக் கொண்டுள்ளன. இருந்தாலும், இந்த இரண்டுக்குமிடையில் தெளிவான வித்தியாசம் ஒன்று உள்ளது. அ.சா.நிறுவனங்கள் நு.நி.நிறுவனங்களாக இருக்கத் தேவையில்லை. நு.நி.நி வறிய மக்களுக்கு நிதிச் சேவைகளை வழங்ககின்றன அதே நேரத்தில் அ.சா.நி வேறு வழி மூலம் சமுதாய வளர்ச்சியில் கவனம் செலுத்துகின்றன. நு.நி.நி இரண்டு முக்கிய அம்சங்களில் கவனஞ்செலுத்துகின்றன.

1.Presentation by Director of supervision of Non-Bank Financial Institutions on 'Responsible Finance' at the LMFPA seminar on 23.08.2012

2. Microfinance Review Sri Lanka 2011; p 22

அவையாவன சேவை பெறுவோரை சென்றடைவது மற்றும் நிலைத்து நிற்கும் தன்மையாகும். அவர்களுடைய நோக்கம் அதிக இலாமீட்டுவதாக இல்லாவிட்டாலும், தங்களுடைய நிதி மற்றும் செயற்திறன் நிலைத்திருக்கும் வகையில் போதியளவு இலாபத்தினை ஈட்ட வேண்டும். சமுதாய வளர்ச்சி சார்ந்த அ.சா.நி, அநேகமாக தங்களுடைய செயற்பாடுகளுக்கு கொடையாளிகளில் தங்கியிருப்பர். நு.நி.நி தங்களுடைய நிதியினை சந்தையில் சேமிப்பு மூலமாக வாடிக்கையாளர்களிடமிருந்தும் மற்றும் சந்தையில் வேறு வழிகளில் கடனாகவும் பெறுவர்.

## லங்கா நுண்நிதி தொழில்முனைவோர் சங்கம் (LMFPA)

ல.நு.தொ.ச என்பது நு.நி.நிறுவனங்களின் ஒரு வலையமைப்பு சங்கமாகும். 1990ன் நடுப்பகுதி முதல், நாடாளாவிய ரீதியில் நு.நி.நி துறையில் கணிசமானதொரு வளர்ச்சி காணப்பட்டது. அவைகள் தனிப்பட்டவைகளாக (சிதறிய நிலையில்) செயற்பட்டன ஏனெனில் அவைகளை ஒரே குடையின் கீழ் ஒருங்கிணைப்பதற்கு ஒரு நிறுவனம் இருக்கவில்லை. ஏனைய நாடுகளில் இருப்பது போன்று நுண்நிதித் துறையில் ஒரு வலையமைப்பினை உருவாக்கும் தேவையேற்பட்டது. இந்த தேவை 2006ம் ஆண்டு, ல.நு.தொ.சங்கத்தினைத் உருவாக்குவதன் மூலம் அடையப்பட்டது. இந்த துறையிளைக் பாதிக்கும் விடயங்களில் ஆலோசனை மற்றும் ஆதரவு திரட்டுதல், நுண்நிதி நிலைத்து நிற்கும் வகையிலான ஒரு சாதகமான சூழ்நிலையினை உருவாக்குதல் மற்றும் அங்கத்துவ நு.நி.நி நிறுவனங்களின் திறனை மேம்படுத்துதல் என்பன இந்த வலையமைப்பின் முக்கிய செயற்பாடுகளாகும். ல.நு.தொ.ச நாட்டிலுள்ள நு.நி.நிறுவனங்களுக்கான ஒரேயொரு வலையமைப்பாகும். இது உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட 2007 கம்பனி சட்டம் நம்பர் 7 – 2007ம் ஆண்டு பதியப்பட்டதொரு நிறுவனமாகும் இப்பொழுது, இதனுடைய அங்கத்துவத்தில் 74 நு.நி.நி அடங்கியுள்ளன. ல.நு.தொ.சங்கத்தின் நோக்கங்கள் கீழ்வருமாறு:

- வறிய மக்களை வறுமையிலிருந்து ஒழிப்பதற்காக ஸ்ரீலங்காவில் சகல பாகங்களிலும் நிதிச் சேவைகள் வழங்கும் நுண்நிதி அமைப்புகளுக்கிடையில் அங்கத்துவத்தினை ஊக்குவித்தல்
- நுண்நிதி நிறுவனங்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களின் கூட்டு முயற்சியூடாக, நுண்நிதித் துறைக்கான வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்குமான கொள்கைக்குரிய சாதகமான சூழ்நிலையினை பரிந்துரைப்பது
- சர்வதேசத்தினால் ஏற்றுக் கொள்ளக்கூடயதொரு செயற்திறன் நியமங்களை நுண்நிதி நிறுவனங்கள் ஏற்று நிறுவும் வகையில் ஊக்குவித்தல்
- தகவல் சேகரிக்கும் முறைமைகள், மின்னணு மற்றும் ஊடகம் மூலம் பகுப்பாய்வு மற்றும் பரம்பலை வளர்த்து வலுப்படுத்தல்
- சம்பிரதாய நிதிச் சந்தைகளை நுண்நிதி சேவைகளாக விரிவுபடுத்த ஊக்குவித்தல்
- கற்றல் பயிற்சி பட்டறைகள், கருத்தியல் விவாதங்கள்,மற்றும் ஏனைய நிறுவனங்களுடனான இணைப்பு ஊடாக நுண்நிதி நிறுவனங்கள் பொருளாதார செயலில் வறிய மக்களுக்கு தகுந்த மற்றும் நிலைத்து நிற்கக்கூடியதான நுண்நிதிச் சேவைகளை வழங்குவதற்கான திறனை பாதுகாத்து வலுப்படுத்தல்
- நுண்நிதித் துறையில் நியமங்களை அமைத்து நிபுணத்துவத்தை அதிகரிக்கும் வகையில் நு.நி.நிறுவனங்களுக்கு சுயாதீன செயற்திறன் கண்காணிப்பு அமைப்பினை வளர்த்தல்
- நுண்நிதித் துறையின் வளர்ச்சியினை மேம்படுத்தும் வகையில் அரசாங்கம், கொடையாளி முகவர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தக கடன் வழங்குபவர்கள் ஆகியோர்களுடன் வலையமைப்பினை உருவாக்கி வளங்களை திரட்டுதல்.

LMFPA உள்ளூரிலும் அதேபோன்று சர்வதேச மட்டத்திலும் தேவையான ஒருங்கிணைப்பினை வழங்குகின்றது. நுண்நிதித் துறையினை வளர்க்கும் ஒரு உச்ச நிலையான அமைப்பும் இதுவாகும்.

# இலங்கையில் நு.நி.நிறுவனங்களின் செயல்திறன்

## நாட்டிலுள்ள நுண்நிதி நிறுவனங்களின் எண்ணிக்கை

2006ல் ஒரு நுண்நிதி நிபுணர்கள் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, ஸ்ரீலங்காவில் 14,000 மேற்பட்ட நுண்நிதி வழங்குனர்கள் இருக்கின்றார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவைகளுள் சனச வலையமைப்பின் 8,424 சங்கங்களும் அடங்கும். இருந்தாலும் இவைகளில் 50மூ க்கு மேற்பட்ட சங்கங்கள் இயங்காத நிலையில் இருப்பதாக நம்பப்படுகின்றது. உண்மையில், எனவே, இயங்கக்கூடிய நிலையிலுள்ள நுண்நிதி வழங்குனர்களின் எண்ணிக்கை 14,000 க்கு குறைவானதே. நாடளாவிய ரீதியில் 2006/2007 ஜி.ரி.இசட்- புறமிஷ் இனால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆய்வின்படி நாடு முழுவதும் குறைந்தளவு 10,000 செயல்படும் நிலையங்கள் செயற்படும் ஒரு வலையமைப்பு இருப்பதாக வெளிப்படுத்தியுள்ளது. மத்திய வங்கியின்படி மொத்த நு.நி.நி நிலையங்கள் 16,500 க்கு மேற்பட்டவையாக இருக்கின்றது[3].

## வறிய மக்களைச் சென்றடைதல

வங்கியிலிருந்து நிதிச் சேவைகளைப் அணுகுவதற்கு வசதியில்லாக அல்லது குறைந்தளவு வசதியுள்ள வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் அதிகளவு மக்களை சென்றடைவதே நுண்நிதித் துறையின் முக்கியமான நோக்கமாகும். இலங்கையில் அ.சா.நி- நு.நி.நிறுவனங்கள் மற்றும் சனச அபிவிருத்தி வங்கி மூலம் 1.4 மில்லியனுக்கு மேற்பட்ட மக்களுக்கு சேவை வழங்கப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த தொகை முதன்மையான சிக்கன மற்றும் கடன் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த வாடிக்கையாளர்களை உட்படுத்தப்படவில்லை.

நு.நி.நி துறைவாரியான தரவுகளின்படி, அநேகமான நுண்நிதி வாடிக்கையாளர்கள் கிராமப்புரத்தினைச் சோர்ந்தவர்களாக காணப்படுகின்றனர். ஜி.ரி.இசட்- புறமிஷ் (GTZ – ProMiS) – (ஜேர்மன் அரசாங்கத்தினால் இலங்கை அரசாங்கத்தின் நிதி அமைச்சுடன் இணைந்து நடைமுறைப்படுத்திய நுண் நிதி வளர்ச்சி திட்டம்) நிறுவனத்தின் ஒரு ஆய்வின்படி, 90% நுண்நிதி வாடிக்கையாளர்கள் கிராமப் புரத்தினைச் சரர்ந்தவர்கள். இருந்தாலும், தோட்டப் பகுதிகளில் நுண்நிதி வழங்குனர்கள் மிக அரிதாகவே காணப்படுகின்றனர், அங்கே 1% க்கு குறைவான நுண்நிதி நிறுவனங்களே இயங்குகின்றனர்[4]. இதே அறிக்கை, அநேகமாக நு.நி.நி வறியமக்களுக்கே கடன்களை வழங்குகின்றதாயினும் ஆனால் அதிகளவான மிகவும் வறிய மக்களைச் சென்றடையவில்லையென வெளிப்படுத்துகின்றது. குறிப்பாக, தனியார் துறை நு.நி.நி தங்களுடைய கடன்களில் அரைவாசிக்கு மேலாக மாதாந்தம் ரூபா.3,000க்கு குறைவாக உழைக்கும் வறிய மக்களுக்கே வழங்குகின்றனர். 82% கடன்கள் மாதாந்தம் ரூபா.5,000க்கு குறைவாக உழைக்கும் மக்களுக்கே வழங்கப்பட்டுள்ளன.

## நுண்நிதி வாடிக்கையாளர்களின் வருமான விபரங்கள்

| நு.நி.நி | மாதாந்த வருமானம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | <Rs.3000 | Rs.3000-5000 | Rs. 5000-10000- | Rs.10000-20000 | Rs.20000-40000 | >Rs.40000 |
| பி.அ.வ | 19.3% | 18.3% | 24.4% | 28.3% | 7.5% | 2.3% |
| ச.வ.ச | 85.0%* | | | | | |
| சனச∴ மு.சி.க.கூ.ச | 20.1% | 29.4% | 26.3% | 14.7% | 5.3% | 4.3% |
| ஏனைய நு.நி.நி | 50.4% | 31.5% | 13.3% | 3.0% | 1.6% | 0.3% |

(நுண்நிதித் துறை அறிக்கை 2010 – பக்கம் 17ல் உள்ள 6வது அட்டவணையிலிருந்து பெறப்பட்டது)
ஏனைய வருமான பிரிவுகள் வழங்கப்படவில்லை.
**பி.அ.வ** – பிராந்திய அபிவிருத்தி வங்கிகள், **ச.வ.ச** – சமுர்த்தி வங்கி சங்கங்கள், **மு.ச.க.கூ.ச** – முதன்மை சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கங்கள்)

3. Presentation by Director of supervision of N0n-Bank Financial Institutions on ‘Responsible Finance’ at the LMFPA seminar on 23.08.2012
4. GTZ; BWTP- Microfinance Industry Report Updated edition 2010; p17

புவியியல் ரீதியான சென்றடையும் போக்கினைப் பார்க்கும் பொழுது, து.நி.நிறுவனங்கள் நாடு முழுவதும் பரந்து காணப்படுகின்றதோடு, தென் மாகாணத்தில் கொஞ்சம் செறிவாகவும், வட மாகாணத்தில், குறைந்துள்ளதாகவும் காணப்படுகின்றன. 2009ல் முடிவுற்ற போரின் பின்பு, நு.நி.நிறுவனங்களும் வங்கிகளும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்த இந்தப் பகுதிகளில் விரிவாக்கத் தொடங்கியுள்ளன.

மாகாண ரீதியாக நு.நி.நி எண்ணிக்கையும் அவை பரந்திருக்கும் விகிதாசாரமும்

| | | | |
|---|---|---|---|
| மேல் மாகாணம்: | 12.2% | ஊவா மாகாணம் | 10.8% |
| மத்திய மாகாணம் | 10.1% | சப்ரகமுவ மாகாணம்: | 11.2% |
| தென் மாகாணம் | 24.0% | வட மாகாணம | 5.2% |
| வட மேல் மாகாணம் | 10.2% | கிழக்கு மாகாணம் | 12.3% |
| வட மத்திய மாகாணம் | 3.9% | | |

## நிதிசார்பற்ற சேவை வழங்கல்

ல.நு.தொ.சங்கத்தினுடைய நுண்நிதி மீளாய்வு - ஸ்ரீலங்கா 2011 (பக்கம் 42)யின்படி அநேகமான வங்கி அல்லா நு.நி.நி, தொழில் வளர்ச்சி, கல்வி, சுகாதாரம், மற்றும் பெண்களை வலுப்படுத்தும் சேவைகளைத் தங்களுடைய வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றன.

கல்வி வழங்கல் சேவைகள்




Source: LMFPA Data Collection 2011

பலதரப்பட்ட கல்விச் சேவைகள்




Source: LMFPA Data Collection 2011

பெண்களை வலுப்படுத்தும் வழங்கல் சேவைகள்




Source: LMFPA Data Collection 2011

பெண்களை வலுப்படுத்தும் வகைகள்




Source: LMFPA Data Collection 2011

சுகாதாரம் சம்பந்தமான வீட்டுச் செலவுகளைக் குறைக்கும் குடும்ப தொழிலில் உற்பத்தி அதிகரிப்பு மற்றும் குடும்பத்தின் வாழ்க்கைத் தரத்திலும் வளர்ச்சியடையும் உதவும். மேலும் கடனுடன் இணைந்த சேவைகள் கடனைத் துஷ்பிரயோகம் செய்வதினைக் குறைக்கும் மற்றும் கடன் பெறும் திறனை அதிகரிக்கின்றது. பெண்களை பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியியிலும் வலுப்படுத்தும் பொழுது, இவ்வாறான நிதிச் சார்பற்ற சேவைகள் மிகவும் பெறுமதியாக இருக்கும். ஏனெனில் பெண்கள் பொதுவாக பொருளாதார மற்றும் சமூக ரீதியில் பின் தங்கிய நிலையிலேயே இருக்கின்றனர்.

## வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை

நு.நி.நிறுவனங்களினால் சேவை வழங்கப்படும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை சம்பந்தமான விரிவான தகவல்கள் எதுவுமில்லை. கிடைக்கப்பட்டுள்ள தகவல்களும் அவற்றின் தரம் சம்பந்தான பிரச்சினையில் உள்ளது. அத்தோடு இவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட கணக்குகளை கொண்ட வாடிக்கையாளர்கள் மற்றும் ஒன்றின் மேல் இன்னொரு கணக்கு போன்ற தகவல் பிரல்வுகளும் காணப்படுகின்றன. ல.நு.தொ.சங்கத்தின் மீளாய்வின்படி, 49 முக்கிய நு.நி.நிறுவனங்களின் வாடிக்ககையாளர்கள் ஏறத்தாள 1.4 மில்லியன் ஆகும்[5]. இவைகளில், சனச சம்மேளனம், கூட்டுறவு கிராமிய வங்கிகள், சமுர்த்தி, கமிதிரிய (Gamidiriya) மற்றும் விவசாய சங்கங்கள் மற்றும் கடற்தொழில் வங்கிகள போன்ற ஏனைய சமூக அடிப்படையிலான நுண்நிதி வழங்குபவர்கள் அடங்கவில்லை[6]. இவ்வாறான நிறுவனங்களின் சேவை வீச்சினைக் கணக்கிலெடுக்கும் பொழுது, நுண்நிதித் துறை நாட்டிலுள்ள பெரும்பகுதியான வறிய மக்களுக்கு சேவை செய்கின்றது என்பது தெளிவாகின்றது.

## வழங்கப்பட்ட மொத்த கடன் தொகை

ல.நு.தொ.ச "நுண்நிதி மீளாய்வின்படி", அனைத்து நு.நி.நி கடன் வழங்கிய தொகையின் தொகுப்பு, சனச சம்மேளனம் மற்றும் கூட்டுறவு சங்கங்களையும் தவிர்த்து 2010ம் ஆண்டு ரூபா.60 பில்லியன் ஆக இருந்தாலும் இவைகளில், பி.அ.வ, மற்றும் சனச அபிவிருத்தி வங்கி அதிகப்படியான கடன் தொகையாக ஏறத்தாள ரூபா.51 பில்லியன் தொகை எனப் பதிவாகியுள்ளது[7]. ஏனையவைகளில், அதிகப்படியானதாக கடன் தொகை சர்வோதய சீட்ஸ் ரூபா.3 மில்லியன் எனப் பதிவாகியுள்ளது. இந்த தரவுகள் நாட்டிலுள்ள அநேகமான நு.நி.நிறுவனங்கள் சிறியளவில் சேவைசெய்வதாகவே தெரிவிக்கின்றன.

---

5 Lanka Microfinance Practitioners' Association: Performance and Analysis Report 2011 p.22

6 If all numbers were added without assuming a percentage for active borrowers the number of clients of all institutions could be as high as 13 million. Ibid.

7 Lanka Microfinance Practitioners' Association: Performance and Analysis Report 2011 p.22

## இலக்கிடப்படும் குழுக்கள்

வங்கி சார்பற்ற / நிதி நிறுவனங்களின் இலக்கிடப்படும் குழுக்கள் அநேகமாக தனித்தனியான நுண்நிதி நிறுவனங்களால் வரையறுக்கப்படும் மாதாந்த வருமானத்திற்கு குறைந்த வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தவர்களாகவே இருக்கின்றனர். மற்றுமொரு காரணம் என்னவெனில், இவ்வாறான நு.நி.நி அநேகமாக கிராமப் புறங்களிலுள்ள வறிய பெண்களையும் மற்றும் ஏனைய பொருளாதார ரீதியில் நலிந்த குழக்களையுமே இலக்காகக் கொண்டுள்ளனர். ஒட்டு மொத்தமாக, ஏறத்தாள 72%[8] நு.நி.நி வாடிக்கையாளர்கள் கிராமப் புறத்தினைச் சார்ந்தவர்களாக இருப்பினும் சில நு.நி.நிறுவனங்களின் 100% வாடிக்கையாளர்கள் கிராமப் புறத்தைச் சார்ந்த வறிய மக்களாக இருக்கின்றனர்.

ஒரு நிறுவனத்தின் வாடிக்கையாளர்களின் வறுமை நிலை மட்டம்




Source: LMFPA Data Collection 2011

இலக்கிடப்படும் வாடிக்கையாளர்கள்




Source: LMFPA Data Collection 2011

## பெண்கள் பங்குபற்றல

உலகளாவிய ரீதியில், நு.நிநி அநேகமாக மிகவும் பின் தங்கிய நிலையிலுள்ள வறிய நிலையிலுள்ள பெண்களையே கடன் பெறுபவர்களாக இலக்கிடுகின்றனர். இதில் இலங்கை விதிவிலக்கல்ல. இலங்கையில், கடன் பெறுபவர்கள் மொத்த தொகையில் 60% பெண்கள் காணப்படுகின்றனர். இருந்தாலும், 23 நிறுவனங்களில் 90% மேற்பட்டவரகள் பெண்களாகவும் அதே நேரத்தில் சில நு.நி.நி 100% கடன்பெறுபவர்கள் பெண்களாகவும் இருக்கின்றனர்.

## நேரடியான வேலைவாய்ப்பினை உருவாக்குதல்

இளைஞர்களுக்கு நேரடியான திறன் கொண்ட வேலைவாய்ப்பினை உருவாக்குவதில் நு.நி.நி முக்கியமான பங்கினை வகுக்கின்றது என்பதனை அநேகமான மக்கள் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர். அநேகமான நு.நி.நி ஊழியர்கள் பெண்கள். ல.நு.தொ.சங்கத்திற்கு 49 நு.நி.நிறுவனங்கள் 12,919 ஊழியர்கள் பலவிதமான நிலைகளில் 2010 இறுதியளவில் உள்ளனர் என அறிக்கையிட்டுள்ளன. இதில் பெண் ஊழியர்களின் விகிதாசாரம் 59%. மேலும், கி.கூ.வ, சனச,மற்றும் மு.சி.ச.கூ.ச அதிகளவிலான ஊழியர்கள் வேலை செய்கின்றனர். முழு நேர ஊழியர்களை விட, தொண்டு ஊழியர்களாக சனச, மு.சி.ச.கூ.ச மற்றும் சங்கங்கள் ஆகியவற்றில் வேலை செய்பவர்கள் கிட்டத்தட்ட 66,300 உள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. கமிதிறிய (Gamidiriya) மற்றும் ஏனைய நிறுவனங்களில் வேலை செய்பவர்களையும் சேர்த்துக் கொண்டால் இவ் எண்ணிக்கை 100,000தை தாண்டும்.

---

8 Lanka Microfinance Practitioners' Association: Performance and Analysis Report 2011 p.24

## நுண்நிதி நிறுவனங்களின் வளர்ச்சி இலக்கு

இலக்கிடப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு நிதி சார்ந்த மற்றும் நிதி சார்பற்ற சேவைகளை வழங்குதல் மூலமாக, நு.நி.நி பரந்தளவிலான வளர்ச்சி பிரச்சனைகளை நிவர்த்தி செய்கின்றது. நு.நி.நி அவர்களுடைய இலக்கின்படி, முக்கியமான பொது இலக்குகளை முன்நிலைப்படுத்துகின்றன. கீழேயுள்ள விளக்கப் படம் அநேகமான நிறுவனங்களின் அபிவிருத்தி சார்ந்த இலக்குகளின் முக்கியத்துவத்தினைக் காட்டுகின்றது.

### வளர்ச்சியின் இலக்குகள்




அநேகமான நு.நி.நி வறுமை ஒழிப்பினை அதிகளவில் முன் நிலைப்படுத்தியுள்ளனர். நுண்நிதி நிறுவனங்களுக்கு நிதி வழங்குவது வறுமை ஒழிப்பிற்கானதொரு காரணியாக உள்ளது. வங்கிகள் நிதிச் சேவைகளை வித்தியாசமான சேமிப்பு வகைகள், குத்தகை, ஈடு வைத்தல், பணப் பரிமாற்றம் ஆகியவை போன்ற பல தரப்பட்ட சேவைகளை அதிகளவில் வழங்குவதில் கவனம் செலுத்துகின்றன. அதே வேளையில், அ.சா.நி-நு.நி.நிறுவனங்கள் பல தரப்பட்ட கணிசமானளவு நிதிச் சேவையற்ற சேவைகளை நுண் நிதி வசதிகளுக்கு மேலாக வழங்குவதற்கு கவனம் செலுத்துகின்றன.

# இலங்கையில் நுண்நிதித் துறைக்கான கட்டுப்பாடுகள

நுண்நிதித் துறைக்கென குறிப்பிட்ட விதிமுறைகள் இல்லாவிடினும், நு.நி.நி முற்று முழுதாக கட்டுப்பாடின்றி தொழிற்படுவதில்லை. சில நு.நி.நி, முக்கியமாக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குட்பட்டவையாதலால், சில வகையான விதிமுறைகளுக்குட்பட்டவை. உதாரணமாக, வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற விசேட வங்கிகள் மற்றும் நிதி மற்றும் குத்தகை நிறுவனங்களின் நுண்நிதி செயற்பாடுகள் மத்திய வங்கியினால் கட்டுப்படுத்தப்படுகின்றது. சமுர்த்தி வங்கியின் செயற்பாடுகள் ஸ்ரீலங்கா சமுர்த்தி அதிகார சபையினால் நிர்வகிக்கப்படுகின்றது, கி.கூ.வங்கிகள் கூட்டுறவுத் திணைக்களத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்றன. இவ்வாறான நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் அளவு, நடைமுறைகள், நியமங்கள் மற்றும் மேற்பார்வை என்பன இவ்வாறான நிறுவனங்களின் சட்டங்களுக்கு ஏற்ப கணிசமானளவில் மாறுபடும். இருப்பினும், இதுவரை அ.சா.நி – நு.நி.நி செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளைக் கட்டுப்படுத்தும் கம்பனிச் சட்டம் போன்ற பொதுவான ஒன்றைத் தவிர வேறு ஒரு முறைமை இல்லை.

### அரசாங்கத்தின் கொள்கை

புதிய நிறுவனங்களை உருவாக்கி மற்றும் அரச ஆதரவான திட்டங்களை நடைமுறைப்படுத்தி நுண்நிதிச் சேவைகளை வளர்ப்பதற்கு அரசாங்கம் ஆதரவாக இருந்தாலும், நுண்நிதித் துறைக்கு ஒரு குறிப்பிடப்பட்ட தேசிய கொள்கை இல்லை. கிராமிய வளர்ச்சியினையும் வறுமை ஒழிப்பினையும் மேம்படுத்தும் நோக்கமான கொள்கையுடன் நுண்நிதிச் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கான எந்தவொரு வழிமுறையும் இருக்கவில்லை. மஹிந்த சிந்தனை திட்டம்[9] ஒரு தேசிய கொள்கையினதும் மூலோபாயத்தினதும் தேவையினை அங்கிகரிக்கின்றது. மஹிந்த சிந்தனையின் ஆரம்ப கால பத்திரங்கள் "ஒரு தனித்துவமான கொள்கை மற்றும் கட்டமைப்பு இல்லாதபடியால் நுண்நிதி நிறுவனங்கள் விருத்தியில் அடிப்படையில் நிலைத்து நிற்கமுடியவில்லை, ஆகவே இது ஆளுகை வலுவிழக்கச் செய்கின்றது, நிறுவனங்களின் சுயாட்சியினை குறைக்கின்றது, நுண்நிதி நிறுவனங்களை மாற்றியமைப்பதற்குரிய நிதி மதிநுட்பத்தினை மற்றும் அ.சா.நிவைப்ப நிறுவனங்களாக மாற்ற அல்லது அவர்களுடைய சேமிப்பு செயற்பாடுகளை அங்கீகரித்து அமுலாக்க பற்றாக்குறையினை அதிகரிக்கின்றது"[10]. மஹிந்த சிந்தனை ஒரு கொள்கையினை அங்கிகரிக்கும் அதே வேளையில் மேலும் "ஸ்ரீலங்கா அடுத்த தசாப்தத்தில் ஒரு செழுமையான மற்றும் வலுவான நுண்நிதித்துறையினைக் கொண்டிருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளது. நிலைத்து நிற்கக்கூடிய மற்றும் வறுமையினை நோக்கமான கடன்களை நுண் மற்றம் சிறிய தொழில் முயற்சிகளாக மாற்றுதல் மற்றும் அதே போன்று வறிய மக்களின் குடும்பத்தினரின் பல வகைப்பட்ட தேவைகளையும் அடங்கிய நிதிச் சேவைகளின் ஏற்பாட்டில் இது ஈடுபடும், சேமிப்பினை திரட்டுதல், காப்புறுதி மற்றும் பண பரிமாற்றத்திற்குரிய சேவைகளை திறமையாகவும் சிறந்த வகையிலும் வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும்". அரசாங்கத்தின் குறிப்பிடப்பட்ட கொள்கைகளுக்கு ஏற்ப, அமைச்சரவை ஏற்கனவே நுண்நிதி வளர்ச்சிக்கான சட்டதிட்டங்களை அறிமுகப்படுத்த அங்கீகாரமளித்துவிட்டனர்.

9 Mahinda Chinthana: Vision for a New Sri Lanka
10 Mahinda Chinthana: Vision for a New Sri Lanka

# இலங்கையில் நுண்நிதித் துறைக்கான பிரச்சனைகள்

ஒன்றுக்கொன்று இணைந்ததான பல பிரச்சனைகள் நுண்நிதித் துறையில் காணப்படுகின்றன. இவ்வாறான பிரச்சனைகள், நு.நி.நி கடன்கள் மீதான வட்டி வீதம், சேமிப்புக்களை எடுத்தல் மற்றும் நு.நி.நி நிலைத்து நிற்கும் தன்மை, நுண்நிதிக்கான கொள்கை மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பு போன்றவையாகும்.

## நு.நி.நி வழங்கப்படும் கடன்களின் வட்டி வீதம்

நு.நி.நி எதிர்கொள்ளும் சகல பிரச்னைகளுக்குள்ளும், நு.நி.நி அறவிடும் அவர்களுடைய கடன்கள் மீதான வட்டி வீதம்தான் அநேகமாக அதிகமாகக் கதைக்கப்படும் முக்கிய பிரச்சனையாகும். நுண்நிதித் துறையின் செயற்பாடுகளில் பழக்கமில்லாத அநேகமான மக்கள், நு.நி.நி அவர்களுடைய கடன்கள் மீது அதிகளவான வட்டி வீதத்தினை அறவிடுவதாகவும் ஆகவே அதிக வட்டிக்கு கடன் வழங்கும் கந்து வட்டிக்காரர்களுக்கும் வித்தியாசம் எதுவும் இல்லையென நினைக்கின்றார்கள். இது யதார்த்தத்துக்கு மாற்றமானது. முதலாவதாக, முறைசாரா சந்தையிலுள்ள வர்த்தக ரீதியான கடன் வழங்குபவர்கள் அறவிடும் வட்டி வீதத்தினை விட, நு.நி.நி அறவிடும் வட்டி வீதங்கள் மிகவும் குறைவானவை. இரண்டாவதாக, நு.நி.நி பொதுவாக வங்கிகளாலும் மற்றும் ஏனைய அதிகமான பாரம்பரிய நிதி நிறுவனங்களாலும் கவனிக்கப்படாத, செலவீனங்கள் கூடிய சந்தை பகுதிக்கு சேவை செய்கின்றனர்.

வட்டி வருமானம் பொதுவாக நு.நி.நறுவனங்களுக்கு முக்கிய வருமானம் தரும் ஒரு வழி. ஆகவே, கடன்களின் வட்டி வீதத்தினைக் கணிப்பது நுண்நிதி வியாபாரத்தில் ஒரு மிக முக்கியமான விடயமாகும். நுண்நிதி நிறுவனங்களினால் அறவிடப்படும் கடன்கள் மீதான வட்டி வீதம் அதிகமாகும். ஏனெனில் இவ்வாறான சிறியளவிலான அதிக கடன்களை வழங்குவதற்கான ஒரு அலகிற்கான செலவு சில பெரியளவிலான கடன்களை வழங்குவதற்கான அலகுச் செலவ-யினை விட அதிகமாக இருப்பதே உண்மையான விடயமாகும். பொதுவாக, இவ்வாறான கடன் வழங்கும் செயற்பாட்டுச் செலவு, அதிகமான மனித வளச் செலவு மற்றும் நிர்வாகச் செலவுகள் காரணமாக அதிகமாகக் காணப்படுகின்றது. நுண்நிதிக் கடன் வழங்குவது அதிகப்படியான மனித வலுவுடன் கூடிய செயற்பாடு என்பதால் அதிகளவிலான கள நிலை உத்தியோகத்தர்களை அமர்த்த வேண்டும். வாடிக்கையாளர்களின் மரிமாற்றச் செலவினைக் குறைப்பதற்கும் மற்றும் அவர்களுக்கு இலகுவாக இருப்பதற்கும், கள நிலை உத்தியோகத்தர்கள் தொடர்ந்து கிராமங்களுக்கு விஜயம் செய்வார்கள். நு.நி.நி இது ஒரு அதிகமான செயற்பாட்டுச் செலவாக கருதப்படுகின்றது. நு.நிநிறுவனங்கள், தங்களுடைய செலவீனங்களை முறையாக ஈடு செய்து தங்களுடைய வளர்ச்சிக்கும் ஏனைய வியாபாரங்கள் போன்று நிலைத்து நிற்கும் தன்மையுடன் போதுமானளவு இலாபத்தினையும் பெறும் வகையில் கடன்கள் மீது அறவிடப்படும் வட்டி வீதத்தினை அமைத்துக் கொள்ளும்.

பெரியளவிலான வர்த்தக வங்கிகள் ஒரு கடன் அலகிற்கான குறைந்தளவு நிர்வாகச் செலவ-யினைக் கொண்டுள்ளது. அவர்களுடைய சராசரி கடனின் அளவு ஒரு நு.நி.நி கடன் அளவினை விட அதிகமாகும். 1 மில்லியன் கடன் வழங்குவதற்கு ஏற்படும் நிர்வாகச் செலவு நு.நி.நி வழங்கப்படும் ஒரு 10,000/- கடனுக்கு ஏற்படும் செலவினை விட விகிதாசாரப்படி மிகவும் குறைவானது. இரண்டாவது, வர்த்தக வங்கிகளுக்கு அதிகளவிலான மலிவான நிதி வளங்களை, பொது மக்களிடமிருந்து குறைந்த வட்டி வீதத்தில் திரட்டுவது அடங்கலாக பெறக்கூடியதாகவிருக்கின்றது. இதனால் கடன்கள் மீது அறவிடும் வட்டி வீதத்தினையும் குறைந்த வீதத்தில் வழங்கக்கூடியதாக இருக்கின்றது. நு.நி.நி சட்டக் கட்டுப்பாடுகள் காரணமாக பொது மக்களிடமிருந்து சேமிப்புக்களைத் திரட்ட முடியாமல் இருக்கின்றனர். அப்படியில்லாமல் திரட்டினால் அவைகள் பொதுவாக அதிகமான வட்டியினைக் கொண்டதாகவே இருக்கும். மூன்றாவது, வர்த்தக வங்கிகளின் குறைந்தளவு வட்டிகள் அரசாங்கத்தின் மானிய அடிப்படையிலான திட்டங்கள் மற்றும் பலவிதமான கடன் திட்டங்களுக்குரிய நிதி மீளளிப்பு போன்றவைகளின் உதவியுடன் இணைந்ததாகவும் இருக்கின்றன. மேலும், கடன் திருப்பிச் செலுத்தாதவர்கள் சம்பந்தமாக அரசாங்கத்தின் உத்தரவாதம் அவர்களுடைய ஆபத்து தன்மையினைக் குறைக்கின்றது. நு.நி.நிறுவனங்களுக்கு இவ்வாறான நிதி மீளளிப்பு வசதி, வட்டி மானியம் மற்றும் கடன் உத்தரவாதம் போன்ற நன்மைகள் கிடைப்பதில்லை.

பாரம்பரியமான நிதிச் சேவைகளிலிருந்து வறிய மக்கள் தவிர்க்கப்படும் சூழ்நிலையில், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நு.நி.நிக்கு மாற்றீடாக அமைவது, கடன் வழங்குபவர்களாகின்றனர். வர்த்தக ரீதியில் பணம் கடன் கொடுப்பவர்களின் வட்டி வீதம் நு.நி.நி கடனின் வட்டி வீதத்தினை விட பல மடங்கு அதிகமாகும். இதைத் தவிர கடன்கள் அநேகமாக நம்பிக்கையின் அடிப்படையில் இல்லாமல் தெளிவாக தெரியக்கூடிய பொறுப்புகளான காணி, தங்கம், அல்லது வீட்டுப் பாவனை உபகரணங்கள் மீது தான் வழங்கப்படுகின்றன. வர்த்தக ரீதியில் கடன் வழங்குபவர்கள், பொதுவாக வருடாந்தம் 100% மேலான வட்டியினை அறவிடுகின்றனர். இவ்வாறான அதிகப்படியான வட்டி வீதத்தினை செலுத்த முடியாத வறிய மக்கள் பெரும்பாலும் உற்பத்தி முதலீடுகளுக்கு பொருளாதார அனுகூலத்தினைப் பெறமுடியாமல் இருக்கின்றனர். இது அவர்களுக்குள் வறுமை நிலையினைத் தொடர்ந்து வைத்திருக்க பங்களிக்கின்றது.

ஒப்பீட்டளவில் அதிக வட்டி விதம் இருந்த போதிலும், வறிய மக்கள் தங்களுடைய வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் முயற்சிகள், கல்வி, மற்றும் மருத்துவம் போன்ற பலவிதமான ஏனைய தேவைகளுக்காக பணத்தினை கடன் வாங்க வேண்டி வரும். வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் நு.நி.நி அறவிடும் வட்டி வீதத்தினைச் செலுத்தக் கூடிய நிலையில் இருக்கின்றார்களா என்று சில மக்கள் கேள்விகளை எழுப்புகின்றனர். உலகளாவிய ரீதியில் பெறப்பட்ட அனுபவத்தின்படி, அதற்கான விடை “ஆம்”. வறிய மக்களுக்கு, கடனுக்கான வட்டி வீதத்தினை விட கடன் பெறுவதற்கான தொடர்ச்சியான வழிமுறைகள் தான் முக்கியம். விரைவான கடன் வழங்கல், குறைந்த பரிமாற்றச் செலவு, நெகிழ்ச்சியான மீளளிப்பு அட்டவணைகள், பொருத்தமான கடன் சேவைகள் போன்ற சிறந்த சேவைகளைப் பெறுவதற்காக மக்கள் அதிகமான வட்டி வீதத்தினை செலுத்துவதற்கு தயாராக இருக்கின்றனர். தவிர, பெரிய வியாபாரங்களுடன் ஒப்பிடுகையில், நுண்திதி தொழில் முயற்சியாளர்களால் நிதியிடப்படும் முயற்சிகள் பொதுவாக குறுகிய காலப்பகுதியில் முதலீட்டின் ஒவ்வொரு அலகிற்கும் அதிக இலாபத்தினைத் தருகின்றது. எனவே, அவர்களுடைய முலதனத்தில் கிடைக்கும் வருமானத்தினை விட செலுத்தும் வட்டி குறைவாக இருப்பதால் அவர்களால் அதிக வட்டி வீதத்தினை செலுத்த முடியும்.

இருந்தாலும், நு.நி.நி வட்டி வீதம் அசாதாரணமாக அதிகமாவிருந்தால், இவ்வாறான கடன்களைப் பெறுவதற்கு இயலாத வறிய மக்களுக்கு கடன்களைப் பெறுவதற்கான வழிகளை மறுப்பதற்கு வழி கோலக்கூடும். வர்த்தகம், சிறியளவிலான சிற்றுண்டிச் சாலைகள், உணவு தயாரித்தல், அழகு நிலையங்கள், வர்த்தக ரீதியில் பயிர்களை வளர்த்தல், சிறியளவிலான உடைகள் உற்பத்தி நிலையங்கள் போன்ற தொழில்கள் மட்டும் போதியளவு இலாபத்தினை உருவாக்குவதால் கடன்களைப் பெற முடியும். ஆகவே, நு.நி.நி நடுத்தர மற்றும் நீண்ட கால நோக்கத்தின்படி, படிப்படியாக அவர்களுடைய செயற்பாட்டுச் செலவினைக் குறைத்து உற்பத்தித் திறனை அதிகரித்து வட்டி வீதத்தினையும் குறைக்க வேண்டும்.

கொள்கை வகுப்பாளர்கள், நுண் கடன்களின் வட்டி வீதத்தில் வரம்பினை சுமத்துவதற்கு விவாதிக்கக் கூடும். வரம்பு சம்பந்தமான ஒரு முக்கியமான எதிர்மறை அம்சம் என்னவெனில், நு.நி.நி அவர்களுடைய செலவீனங்களை ஈடு செய்து போதியளவு இலாபத்தினை தங்களுடைய வளர்ச்சிக்கு பெற முடியாமல் போய்விடும், எனவே, அதிகளவிலான செலவீனங்களைக் கொண்ட தொலைதூர கிராமப்புறங்களில் வேலை செய்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டி வரும். இப்படியான சூழ்நிலையில், வட்டி வீத்தின் வரம்பு வறிய மக்களுக்கு உதவுவதை விட பாதிப்பினையே உண்டாக்கும்.

## வைப்புகளை எடுத்தலும் மற்றும் நு.நி.நி நிலைத்து நிற்கும் தன்மையும்

அதிகளவிலான வறிய வாடிக்கையாளர்களை அடைவதற்கு ஏதுவாக, நு.நி.நி நிதி வளத்தில் நிறைந்தவர்களாகவும் நிலைத்து நிற்கக் கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும். இவர்கள், தங்களுடைய செயற்பாட்டு செலவினை ஈடுசெய்வது மட்டுமல்லாது, அவர்கள் தொடர்ச்சியாக இயங்க ஓரளவு சிறியளவிலான இலாபத்தினையும் உருவாக்க வேண்டும். ஆரம்ப தசாப்தங்களில் நிலைத்து நிற்கும் தன்மை ஒரு முக்கியமான பிரச்சினையாக இல்லாதிருந்தது. ஏனெனில் அநேகமான நு.நி.நி சர்வதேச கொடையாளிகள் மற்றும் நிறுவனங்கள் வழங்கிய கொடைகள் அல்லது மானியங்களில் செழித்திருந்தனர். ஆனால் இவ்வாறான வழிவகைகளில் வீழ்ச்சி காணப்பட்ட பொழுது, நு.நி.நி சந்தையிலுள்ள வைப்பு அல்லது கடன்கள் மூலமாக நிதியினைச் சேகரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டனர். நு.நி.நி நிலைத்து நிற்கும் தன்மை ஒரு முக்கியமான பிரச்சினையாகியது. நிலைத்து நிற்கும் தன்மையினை அடைவதற்கு, அதிகப்படியான கடன் அறவிடும் வீதம், தொடர்ச்சியான கடன் வழங்கல் மூலம் வாடிக்கையாளர்களைத் தக்க வைத்தல், செலவுகள் சம்பந்தமான உணர்வு, அதிகப்படியான செயல் திறன் மற்றும் உற்பத்தி திறன் ஆகியவை முக்கியமான காரணிகளாகவிருந்தன. நன்கு வரையறுக்கப்பட்ட ஒரு நுண்நிதி கொள்கை நிலைத்து நிற்கும் தன்மையற்ற நு.நி.நி பெருக்கத்திற்கு இடையூறாக இருக்கும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண உதவியாக இருக்கும்.

நுண் சேமிப்பு வசதிக்கான ஏற்பாடுகள், நுணநிதியின் அடிப்படையான ஒரு அம்சமாகும். சிறியளவிலான சேமிப்பாளர்கள், தங்களுடைய சேமிப்பிற்கு பாதுகாப்பினை, குறைந்தளவு பரிமாற்றச் செலவினையாவது பெறுவதற்கான வசதிகளை விரும்புவர். அவர்கள் இந்த நிதி எங்கு தேவையோ அங்கு பாவிக்கும் வகையில் நெகிழ்ச்சியாக இருக்க விரும்புவர். நு.நி.நிறுவனங்களுக்கு, இவ்வாறான சிறிய சேமிப்புக்கள் ஒரு மிகவும் முக்கியமான நிதி பெறும் வழியாக இருக்கின்றது. இந்தச் சேமிப்புகள் வறிய மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையிலான பலவிதமான சேமிப்பு வடிவங்கள் மூலமாகப் பெறப்படுகின்றது. இவ்வாறானவை சில கட்டாயமான சேமிப்பாகவும் சில தன்னிச்சையான சேமிப்பாகவும் இருக்கின்றன.

இலங்கையில் தற்போதைய சட்ட அமைப்பு, அ.சா.நி-நு.நி.நி முக்கியமாக சில பிரச்சனைகளைத் தோற்றியுள்ளது. தற்போதுள்ள சட்டத்தின்படி, மத்திய வங்கியினால் உரிமம் பெற்றுள்ள நிறுவனங்கள் மட்டுமே, பொது மக்களிடமிருந்து சேமிப்புக்களை திரட்ட முடியும். இருந்தாலும், அ.சா.நி- நு.நி.நி தங்களுடைய அங்கத்தவர்களிடமிருந்தும் மற்றும் கடன் பெறுபவர்களிடமிருந்தும் கடன்களுக்காக சேகரிக்கும் பங்களிப்புகள் பாதுகாப்பற்றவை. இந்த பங்களிப்புகள், கடன் பெறுபவர்களுக்கும் ஒரு வகையில் உதவி செய்கின்றது. ஏனெனில் எதிர்பாராத விதத்தில் இவர்களது காசுப்பாய்ச்சலில் ஏதாவது பிரச்சனை வரும் பொழுது இவைகள் கடன் மீளளிப்புக்கு உதவுகின்றன. கடைசியான கடன் மீளளிப்பினை ஒன்றாகச் செலுத்தவதற்கும் இவ்வாறான பங்களிப்புகள் உதவுகின்றன. 2011 இறுதியளவில் உருவாக்கப்பட்ட நிதிவியாபார சட்டம், இவ்வாறான பங்களிப்புகளைப் பெறுவதினைத் தடை செய்கின்றது. ஏனெனில் இந்தச் சட்டத்தில் வைப்புக்கள் என்பதன் கீழ் இவ்வகையான பங்களிப்புகளும் வகைப்படுத்தப்படுகின்றன. இவ்வாறான நு.நி.நி இதுவரை திரட்டப்பட்ட பங்களிப்புகளை மீளச் செலுத்தி மற்றும் புதிய பங்களிப்புகளைப் பெறுவதினையும் நிறுத்த வேண்டி வந்தது. இதன் விளைவாக திடீரென்று, அ.சா.நி – நு.நி.நிறுவனங்களின் முக்கியமான நிதி கிடைக்கும் மூலம் குறைந்து அதிகப்படியான நிதி வெளிச் செல்வதை எதிர் கொள்ள வேண்டி வந்தது. இந்த புதிய நிலைமை நு.நி.நி வியாபாரத்திலும் இலாபத்திலும் விரைவான வீழ்ச்சியினைத் தோற்ற பொறுப்பாக இருந்தது. இவ்வாறான நு.நி.நி சேமிப்பினைத் திரட்டுவதற்கு ஏதுவான விதிமுறைகள் இவர்களுடைய நிலைத்து நிற்கும் தன்மையின் வளர்ச்சிக்கு முக்கியமாகின்றன.

### நுண்நிதிக்கு ஒரு கொள்கை இல்லாமை

கொள்கை சம்பந்தாக பல வருடங்களாக பேச்சு வார்த்தை நடந்தாலும், இந்த நாட்டில் நுண் நிதிக்கென ஒரு கொள்கை இல்லை. இதன் காரணமாக, வறுமை ஒழிப்பு, கிராமிய வளர்ச்சி ஆகியவற்றினை நோக்கமாகக் கொண்ட ஏனைய கொள்கைகளுடன் நுண்நிதி செயற்பாடுகள் இணைந்து செயற்பட ஒரு வாய்ப்பும் தற்போது இல்லை.

### கட்டுப்பாட்டு அமைப்பு இல்லாமை

ஏனைய நிதி நிறுவனங்களுக்கு குறிப்பிட்ட கட்டுப்பாட்டு அமைப்பொன்று இருப்பதுடன், இந்த நிறுவனங்களைப் பாதுகாத்தும், அத்துடன் அவைகளின் வளர்ச்சிக்கும் நிலைத்து நிற்கும் தன்மைக்கான தேவையான வழிகாட்டல்களை வழங்குகின்றன. இவ்வாறானதொரு கட்டுப்பாட்டு அமைப்பொன்று இல்லாதது கட்டுப்பாடற்ற நு.நி.நி பெரிய பிரச்சனைகளை உண்டாக்குகின்றது.

# ஒரு உகந்த கட்டுப்பாட்டு அமைப்பின் முக்கியத்துவம்

நுண்நிதி நிறுவனங்களுக்கு கட்டுப்பாட்டு அமைப்பு இருக்க வேண்டியதென்ற விடயம் பாரந்தளவில் விவாதிக்கப்பட்டு வரும் விடயமாக இருப்பதற்கு காரணம், ஏனைய கட்டுப்பாடுகளையுடைய வங்கிகளுடன் ஒப்பிடும்போது நுண்நிதி நிறுவனங்களின் குணாதியங்கள் பல்வேறுபட்ட விதத்தில் காணப்படுகின்றமையாகும். பொலீவியா,எதியோப்பியா, கானா, பெரு, பாகிஸ்தான், வியட்நாம், கம்போடியா, தன்ஷானியா, மற்றும் உகண்டா போன்ற நாடுகளில் ஒரு நேரடியான கட்டுப்பாட்டு அமைப்பு இருக்கின்றது. வங்காளதேசம் இந்தோனிசியா, மற்றும் தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளில் ஏனைய நிறுவனங்கள் மூலமாக கட்டுப்பாடு இருக்கின்றது. இந்தியா, அண்மையில் இவ்வாறான கட்டுப்பாட்டினை உருவாக்குவற்கென ஒரு சட்டத்தினைப் பாராளுமன்றத்தில் கொண்டு வந்துள்ளது. இவ் வகையான கட்டுப்பாடுகள் ஒவ்வொரு நாடுகளின் தேவைகளுக்கேற்ற வகையில் வித்தியாசப்படும். கட்டுப்பாட்டு அமைப்பு, நு.நி.நிறுவனங்களின் சட்ட ரீதியான நிலையினை அதிகரிக்கச் செய்து சந்தையில் அவைகளின் செயற்பாடுகளுக்கு உதவி செய்யும். செலுத்தப்படாத கடன்கள் அறவிடுவது சம்பந்தமாக இவ்வாறான நிறுவனங்கள் சட்ட ஆலோசனைகளை அணுகும்பொழுது, இந்த நிறுவனங்களின் கடன் வழுங்கியது சம்பந்தமான சட்ட ரீதியான தன்மை ஒரு கேள்வியாக வழக்குமன்றங்களில் காணப்பட்டது. இவ்வாறான நிறுவனங்களுக்கு சட்ட ரிதியான அங்கிகாரம் வழங்குவதால் இந்த நிறுவனங்களுக்கு கடன் வழங்குபவர்களின் ஆபத்து தன்மை குறையும். அ.சா.நி-நு.நி.நி செயற்பாடுகள் விசேடமான சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்படாதபடியால், இந்த சந்தைக்கு நிதி வழங்குபவர்கள் தங்களுடைய கடன்களை வழங்குவதற்கு தயக்கம் காட்டுகின்றனர்.

பாரம்பரிய நிதித் துறையினைக் கட்டுப்படுத்தும் மத்திய வங்கி இவ்வாறான நுண்நிதி நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் முறையின் முக்கியத்துவத்தினை கோடிட்டுக் காட்டுகின்றது. “சிறந்த முறையானதொரு நுண்நிதித் துறைக்கு, அதன் செயற்பாடுகளை நிபுணத்துவம் கொண்ட வகையில் முன்னெடுக்க வளமான நுண்நிதி நிறுவனங்கள் கொண்ட தொகுதி ஒன்று தேவை. ஏதாவது நிறுவனம் சேமிப்பினை திரட்டும் பொழுது, இவ்வாறான நிறுவனத்திற்கு சேமிப்பாளர்களின் வைப்புகளை பாதுகாக்கும் வகையில் விவேகமான கட்டுப்பாடும் மேற்பார்வையும் தேவைப்படுகின்றது. இவ்வாறான, நு.நி.நி விரிவாக்கத்துடன், வறிய மக்களின் சேமிப்புக்களைத் திரட்டுவதின் பாதுகாப்பினைப்பற்றி அதிகாரிகள் அதிக கவனம் எடுக்கத் தொடங்கினர், ஏனென்றால் நு.நி.நி தற்பொழுது முறையான சட்ட வரையறைகளுக்குள்ளும் மற்றும் மேற்பார்வைகளுக்கும் உட்படுத்தப்படவில்லை. நு.நி.நி விதிமுறைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும் மற்றும் மேற்பார்வை என்பது இவ்வாறான சட்டங்களுக்கு ஒத்துப் போவதாகும். சட்ட விதிமுறைகள் இல்லாத காரணமும் நு.நி.நிறுவனங்களுக்கு கொடையாளிகள்.˙.நிதி வழங்கும் முகவர்கள் நிதி வழங்கத் தயக்கம் காட்டுவதையும் மற்றும் முறையானதொரு கட்டுப்பாடுகள் மற்றும் மேற்பார்வை தேவையெனவும் இதன் மூலமாக நிலைத்து நிற்கும் தன்மையினையும் மற்றும் இந்த துறை குறிப்பிடத்தக்க வீச்சினையும் அடையமுடியும் என நம்புகின்றன, (மத்திய வங்கி வருடாந்த அறிக்கை 2010 பக்கம் 175 & 176)

மத்திய வங்கி மேலும் குறிப்பிடுகையில் “ஒரு பயனுள்ள ஒழுங்குபடுத்தும் பொறிமுறையானது நு.நி.நி உண்மையாகப் பெறப்படும் நன்மைகளை சமூகத்திற்கு நல்ல முறையில் அடையச் செயவதற்கு ஒருமுகப்படுத்த உதவும். ஒரு கட்டுப்பாட்டு பொறிமுறையானது பொது மக்களின் நம்பிக்கையினைக் கட்டியெழுப்புவதோடு பரந்தளவிலான நிதி வளங்களை அடையச் செய்து போன்ற இந்த துறையின் வலுவிற்கு பங்களிக்கும். மோசடியான நிதிநடவடிக்கைகளின் தோற்றத்திற்கும் இது ஊக்கமளிக்காது. (மத்திய வங்கி வருடாந்த அறிக்கை 2010 பக்கம் 176)

வறுமை ஒழிப்பு மற்றம் நிதி சேர்ப்பதற்குமான நு.நி.துறையின் முக்கியத்துவத்தினை உணர்ந்து, மத்திய வங்கியினால் நுண்நிதி நிறுவனங்களுக்கு கட்டுப்படுத்தப்படாத ஒரு ஒழுங்கு முறைக் கட்டமைப்பினை முன்மொழிந்தது. அண்மையில் அமைச்சரவை இந்த சட்டத்திற்கு அங்கிகாரம் வழங்கியுள்ளது. முன்மொழியப்பட்ட இவ்வாறான அமைப்பில், ஒரு கட்டுப்பாட்டு அமைப்பினை மத்திய வங்கி உருவாக்கி இதற்கான கட்டுப்பாடுகள், கொள்கைகள் மற்றும் தரத்தினை அமைக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு, மத்திய வங்கி நு.நி.நி வியாபாரங்களை நடாத்த உரிமங்களை மற்றும் வழிவகைகளையும் வழங்க அதிகாரம் வழங்கப்படுவதோடு நு.நி.நி மேற்பார்வை செய்யும் அதிகாரமும் வழங்கப்படும்.

# முடிவுரை

வறுமை ஒழிப்பிற்கான ஒரு பயனுள்ள கருவியாக நுண்நிதி விளங்குகின்றது. பாரம்பரியமான நிதி அமைப்பிலிருந்து பலவிதமான காரணங்களினால் விலக்கப்பட்டிருந்த மக்களை நிதி சேகரிப்பில் பங்கு கொள்ள நுண்நிதி உதவுகின்றது. எனவே, நுண்நிதி பொருளாதார அபிவிருத்திக்கும் மற்றும் சமூக பொருளாதார சமபங்கிற்குமான இரண்டிற்கும் பங்களிக்கின்றது. வறிய மக்களுக்கு நிதிச் சேவையினை எளிதாக அடைவதற்கு முடியாவிட்டால், வறுமை நிலையில் அவர்கள் தொடர்ந்து இருப்பதோடு மற்றும் சமூகத்தில் ஏற்ற தாழ்வுகள் தொடர்ந்த வண்ணம்மிருக்கும். இந்நிலை பொருளாதார ரீதியிலும், சமூக ரீதியிலும் மற்றும் அரசியல் ரீதியிலும் ஏற்புடையதல்ல.

இந்த காரணியினை அங்கிகரித்து, பல நாடுகளிலுள்ள கொள்கை வகுப்பாளர்கள் இந்த துறையினை மேம்படுத்துவதற்கு, நுண்நிதி சேவைகள் மற்றும் நுண்நிதி நீறுவனங்கள் அடங்கலாக நடைமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளனர். நு.நி.நி தங்களுடைய அணுகுமுறைகளில், நோக்கங்களில், மற்றும் முதிர்ச்சி தன்மையில் மாறுபட்டவைகளாக உள்ளன. எனவே, இந்த துறையினை மேம்படுத்துவது ஒரு சவாலான பணியாகும். இலங்கையும் முக்கியமாக கிராமிய கடன் வழங்கல் மற்றும் ஏனைய திட்டங்களுடன் நுண்நிதியில் மிகவும் நீண்ட அனுபவத்தினைக் கொண்டுள்ளது. 1990 லிருந்து அ.சா.நி போன்ற வர்த்த ரீதியில் இயங்கும் நு.நி.நி தோற்றத்தில் தொடர்ச்சியான வளர்ச்சியினைக் கொண்டுள்ளதுடன் தற்போது அவை ஒரு வலையமைப்பினை தங்களுடைய செயற்பாட்டினை அவர்களுக்குள்ளும் மற்றும் ஏனைய பகுதிகளுடனும் ஒருங்கிணைப்பதற்கு உருவாக்கியுள்ளன. இந்த துறை சார்ந்த பலவிதமான பிரச்சனைகள் தற்போது உள்ளன. இவைகளுக்குள் முக்கியமானது, அவர்களுடைய சட்ட ரீதியான அடையாளமும் மற்றும் சுமூகமான செயற்பாட்டிற்குமான ஆதரவுமாகும். இந்த கட்டுப்பாட்டு அமைப்பு, தற்பொழுதுள்ள கட்டுப்பாடற்ற மற்றும் குறைந்தளவு கட்டுப்பாடுள்ளதுமான நு.நி.நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் சந்தையில் தங்களுடைய நிலையினை மேம்படுத்த உதவுகின்றது. நுண்நிதித் துறையில் வளர்ச்சியை ஏற்படுத்தும், ஒரு சிறந்த கொள்கை கட்டமைப்பைக் கொண்ட, கட்டுப்பாட்டு அமைப்பை வடிவமைக்கவும், அமுல் நடாத்தவும் உதவுவதன் மூலம் கொள்கை வகுப்பாளர்கள் நுண்நிதித்துறையின் வளர்ச்சிக்கும் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கும் சமபங்கிற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்க முடியும்.

**Lanka Microfinance Practitioners' Association**
112 A, Maddumagewatte, Nugegoda, Sri Lanka.
Telephone : +94 11 4367621/ 4369612
Fax: +94 11 2827109
Email : info@lankamicrofinance.com
Website : www.microfinance.lk